விலை: ரூபா 20 பக்கங்கள் 24

# உதயன்

தேர்தல் குறித்து உதயனின் விசேட பதிப்பு இன்று பிற்பகல் வெளிவரும்

சுடர் 30 கதிர் 265 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 1, செவ்வாய்க்கிழமை 18.08.2015

# வடக்கில் மீண்டும் கூட்டமைப்பு அமோக வெற்றி

## யாழில் 5க்கும் மேற்பட்ட ஆசனங்கள் வழங்கி மக்கள் பேராதரவளிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 18

8ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. இன்று அதிகாலை 2 மணிவரை எண்ணி முடிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளதாக வாக்கு எண்ணும் நிலையங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

உத்தியோகபூர்வ முடிவுகள் வெளிவராத போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துத் தொகுதிகளிலும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளதாக அறிய முடிந்தது.

இந்த முடிவுகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் 5க்கும் மேற்பட்ட ஆசனங்களும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 3 ஆசனங்களும் கிடைக்கக் கூடிய பக்கம் 21

## மாவட்ட ரீதியாக வாக்களிப்பு வீதம்

கொழும்பு, ஓக 18

நேற்று நடைபெற்ற தேர்தலில் மாவட்ட ரீதியான வாக்களிப்பு வீதம் வருமாறு:-

| | |
|---|---|
| கொழும்பு | - 65% |
| கண்டி | - 75% |
| காலி | - 70% |
| குருநாகல் | - 65% |
| அநுராதபுரம் | - 70% |
| திருகோணமலை | - 75% |
| பதுளை | - 70% |
| கம்பஹா | - 70% |
| புத்தளம் | - 66.5% |
| கேகாலை | - 70% |
| யாழ்ப்பாணம் | - 65.45% |
| மட்டக்களப்பு | - 60% |
| மாத்தளை | - 70% |
| நுவரெலியா | - 70% |
| மாத்தறை | - 70% |
| வன்னி | - 71.53% |
| திகாமடுல்ல | - 65% |
| இரத்தினபுரி | - 70% |
| களுத்துறை | - 65% |
| மொனறாகலை | - 65% |
| பொலனறுவை | - 75% |

## வன்முறைகளின்றி முடிந்தது தேர்தல்

கொழும்பு, ஓக. 18

எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலானது நேற்று அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது. வன்முறைகள் பெரிதாகத் தலைதூக்கவில்லை. எட்டாவது நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு மாலை 4 மணியுடன் நிறைவடைந்தது.

2014ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடந்த இந்தத் தேர்தலில் ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

21 அரசியல் கட்சிகள் மற்றும் 201 சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 6,151 வேட்பாளர்கள் களத்தில் குதித்திருந்தனர். இவர்களில், அரசியல் கட்சிகளின் சார்பில் 3,653 வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 2[illegible]3 வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

22 தேர்தல் மாவட்டங்களிலும், 12,314 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடந்தது.

அதையடுத்து, பக்கம் 21

### யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் இன்று அதிகாலை வரையில் கிடைக்கப் பெற்ற ஒட்டுமொத்த முடிவுகள்

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | - 190, 340 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | - 27, 389 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 17, 347 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 15, 998 |
| தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி | - 13, 702 |

## வடக்கு மாகாணத்தில் 68.49 வீத வாக்கு பதிவு

யாழ்ப்பாணம், ஓக.18

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 68.49 சதவீத வாக்குப் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 65.45 சதவீத வாக்குகளும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 71.53 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த வாக்கு வீதத்தையும், கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் வாக்களிப்பு பக்கம் 21

## தெற்கில் ஐ.தே.க. முன்னிலை

கொழும்பு, ஓக. 18

தெற்கில் ஐக்கிய தேசிய கட்சி முன்னிலை வகிக்கிறது. இன்று அதிகாலை 1.30 மணிவரை வெளியாகிய உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளின் படி ஆளும் ஐக்கிய தேசிய கட்சி 48 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கிறது. அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 41 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் ஜே.வி.பி 9 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டையான காலி மாவட்டத்தின் பக்கம் 21

## புதிய நாடாளுமன்றின் அமர்வு செப்ரெம்பரில்

கொழும்பு, ஓக 18

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றைக் கலைத்தமை தொடர்பில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமையவே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியே மறுபடியும் நாடாளுமன்றம் கூட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நடைபெற்று முடிந்துள்ள பொதுத் தேர்தலூடாகப் புதிதாகத் தெரிவாகும் உறுப்பினர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியே சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டியுமுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசியல் யாப்பின் பிரகாரம், நாட்டின் பிரதமரும் முதலில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவே சத்தியப் பக்கம் 21

## இலங்கையின் வரலாற்றில் நீதியான தேர்தல் இதுவே

### ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்



கொழும்பு, ஓக. 18

இலங்கையின் வரலாற்றில் நீதியான மற்றும் அமைதியான தேர்தல் ஒன்று இம்முறை நடைபெற்றதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

1947ஆம் ஆண்டில் இருந்து இது பக்கம் 21

## கிழக்கிலும் பேராதரவு

மட்டக்களப்பு, ஓக.18

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிழக்கு மாகாணத்திலும் மக்கள் பேராதரவு வழங்கியுள்ளனர்.

இன்று அதிகாலை 1.30 மணி வரை முடிவடைந்த வாக்கு எண்ணும் பணிகளின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பக்கம் 21

## ஜனநாயக ரீதியில் அமைதியாக நடந்த முதல் தேர்தல் இது

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

ஜனநாயக முறைப்படி, நீதியாகவும் அமைதியாகவும் நடைபெற்ற முதலாவது தேர்தல் இதுவென, பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகக் காரியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் தமது வாக்கைப் பதிவுசெய்த பிரதமர் ரணில் அதனையடுத்துச் செய்தியாளர்களுக்குக் கருத்துத் பக்கம் 21

## தேர்தல் சட்டத்தை மீறினால் தராதரம் பாராது நடவடிக்கை

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு



கொழும்பு, ஓக 18

வெற்றி பெற்றவர்களுக்கு உள்ள உரிமை போலவே தோல்வியடைந்தவர்களுக்கும் தமது அரசியல் நடவடிக்கையை முன்னெடுக்க உரிமை உள்ளது. அனைவரும் அமைதியை கடைப்பிடிக்க ஒத்துழைக்க வேண்டும். தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகத் தராதரம் பாராது தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் பக்கம் 21

## சு.க. மத்திய குழுவிலிருந்து 13பேரை நீக்கிய மைத்திரி

கொழும்பு, ஓக 18

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் அங்கம் வகிக்கும் 25 உறுப்பினர்களில் 13 பேரின் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கெஹலிய ரம்புக்வெல்ல, அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, ஹிருணிக்கா பிரேமசந்திர, அர்ஜுன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜீ.எல்.பீரிஸ், ஜோன்ஸ்டன் பெர்னான்டோ உட்பட 13 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

ஹிருணிக்கா பிரேமசந்திர மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் ஏற்கனவே சிறிலங்கா சுதந்திர கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் இன்று அதிகாலை வரையில் கிடைக்கப் பெற்ற முடிவுகள்

**ஊர்காவற்றுறை தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி– 7699
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 4008
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி – 581
ஐக்கிய தேசியக் கட்சி – 332
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 268

**கோப்பாய் தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி– 9710
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 1547
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி – 1181
ஐக்கிய தேசியக் கட்சி – 973
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 636

**மானிப்பாய் தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி – 20 868
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 2 128
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி – 1 859
ஐக்கிய தேசியக் கட்சி – 2 886
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 1498

**பருத்தித்துறை தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி – 12706
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 1362
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி – 1016
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 1570

**யாழ்ப்பாணத் தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி – 8743
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 1375
ஐக்கிய மக்ககள் சுதந்திர முன்னணி – 729
ஐக்கிய தேசியக் கட்சி – 1154
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 856

**வட்டுக்கோட்டை தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி – 5953
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 1027
ஐக்கிய தேசியக் கட்சி – 919
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – 384

**உடுப்பிட்டித் தொகுதி**
இலங்கை தமிழரசுக் கட்சி – 12,650
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி – 2,396
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் –1,606
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – 1,037
ஐக்கிய தேசியக் கட்சி – 958

### தபால் மூல வாக்களிப்பு யாழ்ப்பாண மாவட்டம்

| | |
|---|---|
| 1. இலங்கை தமிழரசுக் கட்சி | 10,087 |
| 2. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 1,398 |
| 3. ஐக்கிய தேசியக் கட்சி | 1,472 |
| 4. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 1,233 |
| 5. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 591 |

### தபால் மூல வாக்களிப்பு திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| 1. ஐக்கிய தேசியக் கட்சி | 5,215 |
| 2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 2,894 |
| 3. இலங்கை தமிழரசுக் கட்சி | 2,099 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 10,825 |
| செல்லுபடியான வாக்குகள் | 10,685 |

### தபால் மூல வாக்களிப்பு காலி மாவட்டம்

| | |
|---|---|
| 1. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 15,501 |
| 2. ஐக்கிய தேசியக் கட்சி | 12,839 |
| 3. மக்கள் விடுதலை முன்னணி | 3,465 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 32,670 |
| செல்லுபடியான வாக்குகள் | 22,296 |

### தபால் மூல வாக்களிப்பு அம்பாந்தோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| 1. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 8,441 |
| 2. ஐக்கிய தேசியக் கட்சி | 5,955 |
| 3. மக்கள் விடுதலை முன்னணி | 2,401 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 17,194 |
| செல்லுபடியான வாக்குகள் | 16,914 |

### தபால் மூல வாக்களிப்பு வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| 1. இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 3,681 |
| 2. ஐக்கிய தேசியக் கட்சி | 1,444 |
| 3. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 770 |
| 4. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 55 |
| 5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 55 |
| 6.முஸ்லிம் காங்கிரஸ் | 185 |

### சாவகச்சேரி தொகுதி

| | |
|---|---|
| 1. இலங்கை தமிழரசுக் கட்சி | 20,188 |
| 2. ஐக்கிய தேசியக் கட்சி | 1,682 |
| 3.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 1,591 |
| 4. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 1,460 |
| 5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 766 |

### கிளிநொச்சி தொகுதி வாக்களிப்பு

| | |
|---|---|
| 1. இலங்கை தமிழரசுக் கட்சி | 38,155 |
| 2. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 6,417 |
| 3. ஐக்கிய தேசியக் கட்சி | 1, 646 |
| 4. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 1,285 |
| 5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 1,285 |
| 6. தமிழர் விடுதலைக் கூட்டணி | 223 |
| 7. சுயேச்சைக்குழு 4 | 120 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 53,957 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4689 |
| செல்லுபடியான வாக்குகள் | 49268 |

### தபால் மூல வாக்களிப்பு மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| 1. இலங்கை தமிழரசுக் கட்சி | 6,056 |
| 2. முஸ்லிம் காங்கிரஸ் | 1,390 |
| 3. ஐக்கிய தேசியக் கட்சி | 1,101 |
| 4. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 708 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 9,544 |
| செல்லுபடியான வாக்குகள் | 9,458 |

### காலி தொகுதி வாக்களிப்பு

| | |
|---|---|
| 1. ஐக்கிய தேசியக் கட்சி | 32,798 |
| 2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 19,613 |
| 3. மக்கள் விடுதலை முன்னணி | 4,777 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 42,372 |
| செல்லுபடியான வாக்குகள் | 40628 |

### தபால் மூல வாக்களிப்பு இரத்தினபுரி மாவட்டம்

| | |
|---|---|
| 1. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 11,367 |
| 2. ஐக்கிய தேசியக் கட்சி | 9,673 |
| 3. இலங்கை தமிழரசுக் கட்சி | 1,808 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 23,383 |
| செல்லுபடியான வாக்குகள் | 22,98[illegible] |

### மாத்தளை தெவிநுவர தொகுதி வாக்களிப்பு

| | |
|---|---|
| 1. ஐக்கிய தேசியக் கட்சி | 21,187 |
| 2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 29,565 |
| 3. மக்கள் விடுதலை முன்னணி | 4,711 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 57,106 |
| செல்லுபடியான வாக்குகள் | 55,741 |

## பெருந்திருவிழா

வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக் கள் நடைபெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர் வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை இரவு 9 மணிக்கு தீ மிதிப் பும், மறுநாள் வியாழக் கிழமை வேட்டைத்திருவிழாவும் இடம்பெறும். தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழா வும், மறுநாள் சனிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

## அழைத்து சென்றது யாரோ வாக்களித்தது யாருக்கோ

### பொதுமக்களின் செயலால் நேற்று முறுகல்

வலி.வடக்கு, ஓக.18

அரச சார்புக் கட்சி ஒன்றின் வேட் பாளர் நலன்புரி நிலையம் ஒன் றுக்கு அனுப்பி வைத்த தனியார் பஸ் ஸில் சென்ற மக்கள் வேறு கட்சி ஒன்றுக்கு வாக்களித்ததால் முறு கல் நிலை ஏற்பட்டது என்று தெரி விக்கப்படுகின்றது. அதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸ் பாது காப்பும் போடப்பட்டது என்றும் கூறப்பட்டது.

மருதனார்மடத்தில் உள்ள நலன் புரி முகாம் ஒன்றுக்கு அரச சார்புக் கட்சி வேட்பாளர் ஒருவர் மக்களை அழைத்துச் சென்று வாக்கிட வைப் பதற்கு பஸ் ஒன்றை ஏற்பாடு செய் துள்ளார். அதில் சென்ற மக்கள் வாக்களித்த பின்னர் வேறு தமிழ்க் கட்சிக்கு வாக்களித்ததைப் பகிரங்க மாகவே கூறியுள்ளனர். அதைய டுத்து வாக்களிக்க அழைத்துச் சென்றவர்களுக்கும் பொதுமக்க ளுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி யதை அடுத்து அது குறித்துப் பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார், தேர்தல் கண் காணிப் பாளர்கள், பிரதேச செயலர் ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமை யைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அதன்பின்னர் அங்கு பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட் டுள்ளது.

எனினும் விதிமுறைகளுக்கு மாறாக ஆள்களை ஏற்றிச் சென்ற வாகனம் மீதும், ஏற்பாட்டாளர்கள் மீதும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-86)

## வாக்குப்பெட்டி ஏற்றிச் சென்ற வாகனம் விபத்து

கொழும்பு, ஓக.18

திக்வெல்ல, கொட்டகொட வாக்குச் சாவடியில் இருந்து வாக்கு பெட் டிகள் கொண்டு சென்ற கப் வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. வீதி வளைவொன்றில் குறித்த கப் வண்டி தடம்புரண்டு விபத்துக் குள்ளானது என்றும், அதில் பொலிஸ் அதிகாரி யொருவர் காய மடைந்துள்ளார் என தெரிவிக்கப் படுகின்றது. ஆயினும் வாக்குப் பெட்டிக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தை அடுத்து குறித்த வாகனத் தில் இருந்த வாக்கு பெட்டியை வேறு வாக னத்திற்கு மாற்றி மெத வத்தை தொழில் நுட்ப கல்லூரிக்கு கொண்டு செல்வதற் கான நடவ டிக்கையை பொலிஸார் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்டனர் என் றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## திருமணக் கோலத்தில் வாக்களித்த மணமக்கள்



கொழும்பு, ஓக.18

நாடளாவிய ரீதியில் மக்கள் ஆர்வ மான முறையில் வாக்களிப்பு நட வடிக்கையில் ஈடுபட்ட நிலையில் சிகிரிய பிரதேசத்தில் மணமக்கள் மணக்கோலத்தில் வாக்களித்த சுவாரஸ்யச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

ஜப்பானியப் பெண்ணொருவரை மணம் முடித்துள்ள இலங்கை இளைஞர் ஒருவரே மணப் பெண் ணுடன் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்துள்ளார்.

இந்தச் சம்பவம் சிகிரிய பிரதேசத் தில் நடைபெற்றுள்ளது. மணமகன். மணமகளுடன் சிகிரிய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவ டிக்குச் சென்று வாக்களித்துள்ளார். வாக்களிக்க வந்த மணக்களுக்கு அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டி ருந்த பொலிஸார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிவாசிகள் தலைவரும் வாக்களிப்பு

கொழும்பு, ஓக.18

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்காக பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை தொகுதியில் 76 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஆதிவாசிகளின் தலைவரான ஊருவரிகே வன்னில அத்தோ, காலை 10 மணியளவில் தம்பான கனிஷ்ட வித்தியாலயத்தில் தனது வாக்கை அளித்தார். அவருடன் அவரது மனைவி மற்றும் குழுவினர் சமுகமளித்து வாக்களித்தனர். (த)

## போலி வாக்குச் சீட்டுடன் கல்முனையில் மூவர் கைது

கொழும்பு, ஓக.18

போலியான வாக்குச்சீட்டுக்கள், தேர்தல் சுவரொட்டிகள், வேட்பா[illegible] விளம்பர அட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் தேர்தல் தினமான நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை கல்முனையில் மூன்று பேரைக் கைது செய்ததாகக் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் சட்டங்களை மீறி இவர்கள் மோசடியான வாக்குச் சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்று பொதுமக்களிடமிருந்து தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தேர்தல் கண்காணிப்பு விசேட ரோந்துப் பொலிஸார் 54, 49, 32 வயதுகளையுடைய இவர்களைக் கைதுசெய்தனர்.

இந்தச் சந்தேக நபர்களிடமிருந்து [illegible]டோ உட்பட 327 போலி வாக்[illegible]சீட்டுக்கள், 890 வேட்பாளர் விளம்பர அட்டைகள், ஏழு பெரிய மற்றும் சிறிய சுவரொட்டிகள் ஆகியவற்றை கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சந்தேக நபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## கண்காணிப்பாளர்களுக்கு அனுராதபுரத்தில் இடையூறு

கொழும்பு, ஓக.18

அனுராதபுரம் மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் விதி மீறல் தொடர்பான சம்பவம் ஒன்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதவாச்சி தேர்தல் தொகுதியில், குஞ்சுட்ருவ வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த கண்காணிப்பாளர்களது செயற்பாடுகளுக்கு ஒரு குழுவினர் இடையூறு விளைவித்துள்ளனர்.

அத்துடன் நீங்கள் யார்? நீங்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியே கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு யார் அதிகாரம் வழங்கியது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வாகனத்தில் வந்த குழுவினரே இவ்வாறு இடையூறு மேற்கொண்டுள்ளனர். அந்த வாகனத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் திஸ்ஸ கரலியத்த வின் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (த)

# சுசில், அநுரவின் வீட்டு கதவுகளில் தடை உத்தரவு

### ஒட்டுமாறு பணித்தது நீதிமன்றம்

கொழும்பு, ஓக 18

ஸ்ரீ.சு.க மற்றும் ஐ.ம.சு.மு ஆகியவற்றின் பொதுச் செயலாளர்களின் பதவிகளை நீக்கி, நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் ஏற்க மறுத்ததையடுத்து, குறித்த தடையுத்தரவை அவர்களது வீட்டுக் கதவுகளில் ஒட்டுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் இருவரும் கட்சிப் பொதுச் செயலாளர்களின் பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக பேராசிரியர் விஸ்வ வர்ணபால மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோர் பதில் பொதுச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதற்கு எதிராக அநுர மற்றும் சுசிலால் தாக்கல் செய்யப்பட்ட மனு, நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அநுர மற்றும் சுசிலுக்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை ஏற்பதற்கு, குறித்த இருவரும் மறுத்துள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த அறிவித்தல்களை இருவரதும் வீட்டுக் கதவுகளில் ஒட்டுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (த)

# வாக்குச் சாவடியில் ஆள் மாறாட்டம்

### முள்ளியவளையில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஓக. 18

வன்னித் தேர்தல் தொகுதியின் முல்லைத்தீவு முள்ளியவளை ஹிஜ்ராபுரம் வாக்குச் சாவடியில் நேற்றுப் பிற்பகல் ஆள் மாறாட்டம் செய்து வாக்களிக்க முயன்ற நபர் ஒருவர் வாக்குச் சாவடி அதிகாரிகளால் இனம் காணப்பட்ட நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து தெரியவருவதாவது:–

ஹிஜ்ராபுரத்தைச் சேர்ந்த சுல்தான் அப்துல் காதர் முகமது (வயது–38) என்ற நபர் தற்போது கட்டாரில் வசித்து வருகின்றார். இவரின் பெயரையுடைய தேசிய அடையாள அட்டையுடன் வாக்குச் சாவடிக்குச் சென்ற ஒருவர் இவரின் பெயரில் வாக்களிக்க முனைந்துள்ளார். அப்போது அங்கு வாக்குச் சாவடியில் இருந்த கட்சி முகவர் ஒருவர், இந்தப் பெயருக்குரியவர் இவர் இல்லை எனவும், குறித்த பெயருக்குரியவர் கட்டாரில் வசிப்பதாகவும் ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த நபரை விசாரித்த வாக்குச் சாவடி அதிகாரி மேலதிக நடவடிக்கைகளுக்காக அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார். இதன் பின்னர் பொலிஸார் குறித்த நபரை அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

மேற்படி வாக்கு மோசடியில் ஈடுபட முனைந்த நபர் ஆலங்குளம் நுரைச்சோலையைச் சேர்ந்த 28 வயதுடைய சினுஸ் ஆப்தீன் முக மட்டைசல் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (த–102)

# தேர்தல் விதிமுறையை மீறிய ஒருவர் திருமலையில் கைது

திருமலை, ஓக.18

திருகோணமலை மாவட்டம், மூதூர் தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற தேர்தல் விதிமீறல் தொடர்பான சம்பவம் ஒன்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவர், சின்ன கிண்ணியாவில் உள்ள ஜயா மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கச் செல்லும்போது அவரது நெற்றியில் வேட்பாளர் எம்.எஸ்.தௌபீக்கின் ஸ்ரிக்கர் ஒட்டியிருந்தார்.

அத்துடன், அங்கிருந்தவர்களிடமும் வேட்பாளர் எம்.எஸ்.தௌபீக்குக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஊவா மாகாணத்தின் மொனராகலை பிபிலைத் தேர்தல் தொகுதியில் கள்ள வாக்களித்தல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிபிலைத் தேர்தல் தொகுதியில் உள்ள மொனராகலை, இலுக்குப்பொத்தான கனிஷ்ட பாடசாலை வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்கச் சென்ற சரத் குணஸ்ரீ பண்டார என்ற வாக்காளரிடம் அவரது வாக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளதாக குறித்த வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தனது பெயரில் ஏற்கனவே, கள்ள வாக்கு அளிக்கப்பட்டது தொடர்பில் சரத் குணஸ்ரீ பண்டார பிபிலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது. (த)

# தனது வாக்குச் சீட்டை படம் எடுத்தவர் கைது

கொழும்பு, ஓக.18

தேர்தல் வாக்களிப்பின் போது தனது வாக்குச் சீட்டை, சட்டவிரோதமான முறையில் ஒளிப்படம் எடுத்த நபர் ஒருவரை நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ லுனவில பௌத்த கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் வைத்து, லுனுவில பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரையே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் வாக்கைப் பதிவு செய்ய ஒதுக்கியுள்ள கார்ட் போர்ட் மறைவிடத்தில் வைத்து வாக்குச் சீட்டில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்துள்ளார். வாக்களிப்பு நிலைய அதிகாரிகள் குறித்த நபரை அவதானித்தபோது, அவர் வாக்குச் சீட்டை ஒளிப்படம் எடுப்பதைக் கண்டுள்ளனர். இதனை அடுத்து அந்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு வாக்களிக்க இடமளிக்கப்பட்டதாகவும், வாக்களிப்பு நிலையத்தில் சட்டவிரோத செயலை செய்தமைக்காக கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்த பொலிஸார், சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (த)

# டலஸ் வாக்களித்ததை படமெடுத்த ஊடகவியலாளர்களுக்கு எச்சரிக்கை

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும வாக்களித்ததைப் ஒளிப்படம் எடுக்க முனைந்த ஐந்து ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டு, கடுமையாக எச்சரித்து விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் நேற்று முற்பகல் டலஸ் வாக்களிக்கச் சென்றபோது, அவரை பின்தொடர்ந்த ஊடகவியலாளர்கள் அவர் வாக்களிப்பதைப் படமெடுக்க முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அங்கு தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து பின்னர் எச்சரித்து விடுதலை செய்தனர்.

வாக்குச் சாவடிக்குள் ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகுமென குறிப்பிடப்பட்ட அறிவித்தல்கள், அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் வெளியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# கேகாலையில் வேட்பாளரின் சகோதரர்கள் இருவர் கைது

கேகாலை மாவட்டம், ரம்புக்கனை பிரதேசத்தில் வேட்பாளர் ஒருவரின் சகோதரர்கள் இருவர், தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் நேற்றுத் திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக ரம்புக்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் தும்பேமட கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அருகில் வைத்து, தேர்தலில் போட்டியிடும் தமது தமையனின் விருப்பு இலக்கம் பொறிக்கப்பட்ட சிறிய அட்டைகளை வாக்காளர்களுக்கு விநியோகித்ததாக ரம்புக்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக ரம்புக்கனைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

தெல்லிநகர் துர்க்காதேவி ஆலய
2 ஆம் திருவிழா
இன்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை



தெல்லியூர் அரசி
அற்றவர்க்கு அருளும் அரும்பெரும் நிதியமே! உற்றவர்க்கு உதவும் உயிர்த்துணை மருந்தே!
கற்றவர்க்கு இனிக்கும் கவிதையின் புதையலே! பற்றிலார் பரவும் பரவெளிச் சுடரே!
உள்ளுவார் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே! எள்ளுக்குள் எண்ணைபோல் எங்குமுள் உயிரே!
கள்ளத்தைக் கழுவிடும் கருணையாம் புனலே! தெள்ளுற்ற அறிவே! சிவமெனும் நிறைவே!
பூவினுள் மது நீ! புவியினால் வாழ்வு நீ! நாவினில் ஓசை நீ! நனிசுவை அமுதம் நீ!
ஆவியுள் உயிர்நீ! அருளுடை அன்னை நீ தேவினில் தேவுநீ! தெல்லியூர் துர்க்கையே!
வானுயர் கோபுரம் வளங்கெழு மாடங்கள் தேனுறு பூம்பொழில் திருநிறை வீதிகள்
மானுறு அறம் பல மல்கிடும் சாலைகள் பான்மொழிப் பாலரும் பரவிடும் சூழலே!
வையகம் வாழ்த்திட வந்தமர் தேவியே! பொய்யிலா நலம் பலப் பொழிந்திடும் அரசியே
உய்யவே உழுகுடைப் பதியினில் உனைத்திடம் கையினால் தொழுதுமே கருத்தினால்
– பாடுவோம்

இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.
அனுசரணை: ச. அருள்நாதன் (அருள்) தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாடப் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**இடபம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், இலாபமும் உயரும். உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது.

**மிதுனம்:** நீண்டநாள் திட்டத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கூடும். வரவேண்டிய மீதிப்பணம் எளிதில் கிடைக்கும் பணியாளர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

**கடகம்:** சமூகத்தில் சுய கௌரவம் உயரும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**சிங்கம்:** மனதில் புத்துணர்வும், செயல்களில் திறமையும் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு அதிக சலுகை கிடைக்கும். மனைவி விரும்பியதை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வெளியூர்ப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும்.

**துலாம்:** நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரைக் குறை கூறும் சூழ்நிலை ஏற்படலாம். பொறுமை தேவை. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் காண்பீர்கள். உடல்நலனுக்காக சிகிச்சை மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வருமானம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மகரம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபார மிதமான லாபம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் இலாபம் கூடும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் உறவினர்களால் பாராட்டப்படுவர்.

**மீனம்:** வெளியூர் பயணம் செல்ல நேரிடும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வீட்டுச் செலவுக்கு, தாராள அளவில் பணம் செலவழிப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.



## மலையாளத்தில் காலடி வைக்கும் த்ரிஷா

15 வருடங்களாகத் திரையுலகில் நாயகியாகத் திகழும் த்ரிஷா, முதல் முறையாக ஒரு மலையாளப் படத்தில் நடிக்கிறார். அதில் அவருடன் நடிக்கப் போகிறவர் மலையாளத்தின் முன்னணி நடிகர் மம்முட்டி.

தமிழ், தெலுங்கு, இந்தி, கடைசியாக கன்னடம் போன்ற மொழிகளில் நடித்த த்ரிஷா மலையாளத்தில் மட்டும் நடிக்காமல் இருந்தார். எத்தனையோ அழைப்புகள் வந்தும் அவர் அவற்றைத் தவிர்த்துவிட்டார். அறிமுகப்படுத்திய ப்ரியதர்ஷனே மலையாள இயக்குநர்தான் என்றாலும், அங்கு சம்பளம் குறைவு, வணிகப் பரப்பும் குறைவு என்பதால் அவர் மலையாளத்தில் அக்கறை காட்டவில்லை. இந்த நிலையில் இப்போது முதன் முதலாக மலையாளப் படத்தில் நடிக்கிறார், அதுவும் மம்முட்டிக்கு ஜோடியாக!. ஒயிட் எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தப் படத்தை உதய் ஆனந்த் இயக்குகிறார். பிற விவரங்கள் விரைவில் வெளியாகும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.









## பேஸ் புக்கில் பிடித்தவை...










## திட்டமிட்ட வாழ்க்கை இனிக்கும்

ஓர் ஊரில், அங்கு ராஜா 5 வருடங்கள் தான் ஆட்சி செய்யமுடியும். 5 வருடங்கள் முடிந்தவுடன் அவர் காட்டுக்கு அனுப்பப்படுவார். அங்குள்ள மிருகங்களுக்கு அவர் இரையாக நேரிடும். அதனால் யாருமே அந்த ஊரில் 5 வருடங்கள் ஆட்சி செய்யமாட்டார்கள். 5 வருடங்கள் ஆட்சி செய்தால் காட்டுக்குச் செல்ல நேரிடும் எனும் பீதியால் 1 வருடம், அல்லது 2, 3 வருடங்கள் ஆட்சி புரிந்து விட்டு உடல் நலக்குறைவால் மர்மமாக இறந்து விடுவார்கள். ஆனால் அங்கு ஓர்அதியம் நடந்துள்ளது. ஒருவர் மட்டும் சந்தோஷமாக 5 வருடங்கள் ஆட்சி செய்தார். அவருடைய 5 வருடங்கள் ஆட்சி முடிவடைந்து விட்டது. அதன் பின்னர் ஊர் வழமைப்படி அவர் காட்டுக்குச் செல்ல வேண்டும். அந்த ஊர் மக்கள் ஒன்று கூடி அன்றைய தினம் அந்த ராஜாவைக் காட்டுக்கு வழியனுப்ப வந்தி ருந்தார்கள். அப்போது அந்த ராஜா என்னை ராஜா மாதிரியே அந்தக் காட்டில் விட்டு விடுங் கள் எனக் கூறினார். போகும் வழியில் ஒருவர் ராஜாவைப் பார்த்து நீங்கள் மட்டும்எப்படி சந்தோஷமா இருக்கீறீர்கள்? எனக் கேட்டார். அதற்கு ராஜா நான் ஆட்சி செய்த முதல் வருடம் எனது படையை அனுப்பி அந்தக் காட்டில் இருந்த கொடிய மிருகங்களை எல்லாம் கொன்றுவிட்டேன். இரண்டாவது வருடம் அந்தக் காட்டில் ஓர் அரண்மனை கட்டினேன். தற்போது அங்கு ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்கி விட்டேன். இப்போது நான் தான் அங்கும் ராஜா என்றாராம். அருகில் நின்றவர்கள் அப்படியே வாயடைத்து நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய தினம் நாடாளவிய ரீதியில் நாடாளுமன்றத் தேர்தல் மிக சுமுகமான நிலையில் நடைபெற்றது. பொது மக்கள் ஆர்வத்துடன் தமது வாக்குகளை வழங்கியிருந்தனர். அதேவேளை போட்டியிட்ட வேட்பாளர்களும் தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குளை வழங்கியிருந்தனர்.(10)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாக்களிக்கச் சென்றபோது......



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஈ.சரவணபவன் குடும்பத்தினருடன் வாக்களிக்கச் சென்றபோது......



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் வாக்களிக்கச் சென்றவேளை......



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர் பொ.கஜேந்திரகுமார் தாயாருடன் வாக்களிக்கச் சென்றபோது......




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அருந்தவபாலன் வாக்களிக்கச் சென்றபோது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சிறீதரன் வாக்களிக்கச் சென்றபோது......



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வாக்களிக்கச் சென்றபோது......



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேட்பாளர் ந.வித்தியாதரன் குடும்பத்துடன் வாக்களிக்கச் சென்றபோது......



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வாக்களிக்கச் சென்றபோது......



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் வாக்களிக்கச் சென்றபோது......



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் முருகேசு சந்திரகுமார் வாக்களிக்கச் சென்றபோது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் சுற்றாடலில் புனிதத் தன்மையை பேண அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 18

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் புனிதத் தன்மையைப் பேணும் பொருட்டு ஆலயவெளி வீதியைச் சுற்றி சிவப்பு, வெள்ளை நிற சீலைகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆலயவெளி வீதியைச் சுற்றி இந்தச் சீலை கட்டப்பட்டு வருவதால் பக்தர்கள் வீதியில் புனிதத்தைக் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்கள் சைவ ஆசார சீலர்களாக வருகை தந்து ஆலய புனிதத் தன்மையைப் பேணவேண்டும்.

ஆலயத்தின் மஹோற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

மஹோற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளன. அடியார்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு வசதியாக ஆலய வீதிக்கு தற்போது புதிதாக மணல் பரவப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஆலயத்தில் இந்தமுறையும் குற்றச் செயல்களை தடுப்பதற்கு பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடவுள்ளனர். ஆலய உள்வீதி, வெளிவீதி போன்றவற்றில் விசேட கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. (ந-17)

# சிகிச்சை முகாம்

தென்மராட்சி, ஓக.18

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் மட்டுவில் மோகன தாஸ் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மட்டுவில் வடக்கு அரச தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு சிகிச்சையளிக்கப்படும். கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படுபவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடியும் விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்டுள்ளவர்களுக்கு ( கற்றாக் ) இலவசமாக சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான கண் வில்லைகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தலைமையில் நடைபெறும் முகாமுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்டத்தின் பிராந்தியத் தலைவர் லயன் ஈ.எஸ்.பீ.நாகரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார். (ந-9)

# முருங்கைக்காய் விலை சடுதியாக குறைவு

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். குடாநாட்டில் முருங்கைக்காயின் விலை சடுதியாகக் குறைந்துள்ளது.

கடந்த வாரத்தில் கிலோ 250 ரூபாவாக விற்கப்பட்ட முருங்கைக்காய் தற்போது கிலோ நூறு ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

வன்னிப் பகுதியில் இருந்து தினமும் பெருமளவில் முருங்கைக்காய் குடாநாட்டுக்கு வந்து சேர்கின்றது. குடாநாட்டிலும் கறி முருங்கை மரங்கள் அதிகளவில் காய்த்துள்ளது தான் இதன் விலை குறைவடையக் காரணம் என்று முருங்கைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ந-17)

# கடும் வறட்சியால் நீருக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். குடாநாட்டில் நிலவும் கடும் வறட்சி வெப்பத்தால் நீர் நிலைகளில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

அனேகமான குளங்கள் மற்றும் கிணறுகளில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்ததனால் மக்கள் தண்ணீர் இன்றி பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சில குளங்களில் தண்ணீர் முழுமையாக வற்றியதால் குளங்களை அண்டியுள்ள கிணறுகளில் போதியளவு தண்ணீர் இன்மையால் மக்கள் தண்ணீர் இன்றி சிரமப்பட்டும் வருகின்றனர். கூடுதலாக தீவுப் பகுதியிலேயே உள்ள அனேகமான கிணறுகளில் போதியளவு தண்ணீர் இன்றி மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர்.

தற்போதைய கடும் வறட்சியும் மக்களை வாட்டி வதைக்கும் வெயிலாலுமே இந்த நிலைகளில் தண்ணீரின் மட்டம் வெகுவாக குன்றிநதும் செல்கின்றது. (ந-17)

# கும்பாபிசேகம்

தென்மராட்சி, ஓக.18

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிவகாமசுந்தரி அம்பாள் சமேத நடராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.03 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிசேக கிரியைகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை அதிகாலை 5.25 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

ஆகம கிரியாபூசனம் சிவஸ்ரீ ச.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிசேக கிரியைகள் இடம்பெறும். (ந-9)

***

தென்மராட்சி, ஓக.18

சாவகச்சேரி கற்குளி கந்தசாமி ஆலய மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகக் கிரியைகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 25, 26 ஆகிய திகதிகளில் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

கிரியா சிரேஷ்டர் சிவஸ்ரீ தேவபால பிரசன்னக் குருக்கள் தலைமையில் கும்பாபிசேகக் கிரியைகள் நடைபெறும். (ந-9)

# வாக்களிப்பு நிலையங்களை சூழ கட்சிகளின் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். குடாநாட்டில் அனேகமான வாக்களிப்பு நிலையங்களை அண்டி வேட்பாளர்கள் சிலர் தமது கட்சிச் சின்னம், இலக்கங்கள் பொறிக்கப்பட்ட சிறிய அட்டை களை அள்ளி வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களை அண்டிய வீதிகளில் இவை சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. இந்த அட்டைகளைத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அகற்றிச் சென்றனர். வாக்களிப்பு நிலையங்களில் தேர்தலைக் கண் காணிக்கும் நடவடிக்கைகளில் கண்காணிப்பாளர்கள் வாகனங்களில் சுற்றி நடமாடிக் கொண்டிருந் தனர். அத்துடன் வாக்களிப்பு நிலையத்தை அண்டி தேவையற்றவிதத்தில் எவரும் நிற்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ந-17)

# லங்கா ஆயுள்வேதக் கல்லூரி மாணவரது மருத்துவ முகாம்

வலி.வடக்கு, ஓக.18

லங்கா சித்த ஆயுள் வேதக் கல்லூரியின் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை மருத்துவமுகாம் ஒன்று கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுதேச வைத்தியத்துறையின் மாகாண பணிப்பாளர் திருமதி ரி.சியாமா, பதிவாளர் வி.செல்வராசா உட்பட கல்லூரி பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தனர். சுமார் முன்னூறு நோயாளர்கள் வரையில் குறிப்பிட்ட மருத்துவ முகாமுக்கு சமூகம் தந்து பயன் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம் மருத்துவ முகாமில் பாலரோகம் வாதம் தோல் நோய்கள், நீரிழிவு உட்படப் பல நோய்களுக்குச்



சிகிச்சையளிக்கப்பட்டதுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்ததான முகாமும் இடம் பெற்றது. (ந-9)


## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தம்பிஐயா ரவிச்சந்திரன் (ராசன்)



அன்னைமடி 05.01.1968

ஐங்கரன்பாதம் 10.08.1994

திதி: 18.08.2015

ஆழ மாதங்களில் ஆறாது எம் இதயம்
ஆயிரம் உறவுகள் ஆனாலும்
ஆனந்தமான உங்கள் மலர்ந்த அருளாசியை
வாழ்நாளில் காணக்கிடைக்குமோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
நவேந்திர கிரி,
இணுவில் மேற்கு.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி ர.சத்தியானந்ததேவி அவர்களின் அன்புக் கணவர் சின்னத்தம்பி ரவிந்திரன் அவர்கள் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை, மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கைதடி வீரகத்திப்பிள்ளை யார் கோயில் முதலிய கோயில்களின் நீண்டநாள் தொண்டரும் ஆகிய சின்னப்பொடியன் வீரகத்தி 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தியுள்ளார்.

அன்னார் எமது ஆலயத்துக்கு பெரும் தொண்டுகளும்,சேவையும் ஆற்றியுள்ளார். அவரது சேவைக்காலத்தில் தனது எந்தக் கடமையையும் தயங்காது உறுதியாக செய்த எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ற பெரியார் ஆவார்.

எனவே அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப்பெருமானை வேண்டி நிற்பதோடு அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் சபை தெரிவித்துக்கொள்கிறது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடிவீரகத்திப் பிள்ளையார்கோயில் முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபை, கைதடி.
ஆலய நிர்வாகி.

(62321) (45.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 . 03 . 1946



இறைவன் அடியில் 29 . 08 . 2014

திருமதி கண்ணகாதேவி உருத்திர சுந்தரம்

திதி - ஆவணி சதுர்த்தி

ஓராண்டு சென்றாலும் ஈர விழி காயவில்லை
உங்கள் முகம் பார்க்காது உள்ளம் வாடுதம்மா
திரும்பும் இடமெல்லாம் நின் செயலனைத்தும்
கண் முன்னே நிழலாய் தெறித்தே ஓடுகின்றன.........
விழியெல்லாம் தேடுகின்றன உங்களைக் காண முடியவில்லை
உங்கள் வரவினிச் சாத்தியமில்லை என்ற போதும்
மறு ஜென்மம் எனும் சொல்லை மனதார நம்புகின்றோம்
எம்மோடு வாழ்வீர்கள் என்பது கனவாகிப் போனாலும்
எங்கள் மனதில் உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்.

புலம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

கா.உருத்திரசுந்தரம்
(ஓய்வு நிலை சாலை முகாமையாளர்,
இ.போ.ச. காரைநகர்)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி ரவையுடன் ஒருவர் கைது

திருகோணமலை, ஓக.18

கண்டி மாவட்டம், தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தச்கர பிரதேசத்தில் கஞ்சா வடிகால் மற்றும் துப்பாக்கி ரவை வைத்திருந்த ஒருவரை, கடந்த ஞாயிற்றுக்கிழமை தாம் கைது செய்துள்ளதாக தவுலகல பொலிஸார் தெரி வித்தனர். கைது செய்யப்பட்ட நபர், முருதஹகமுல பிரதேசத்தைச் சேர்ந் தவர் என்றும் இவரிடமிருந்து 12 கஞ்சா வடிகாலும் துப்பாக்கி ரவைகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தவுலகல பொலிஸார் தெரி வித்தனர். (ற)

# அரச நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு நிதி

### நிதி அமைச்சர் தெரிவிப்பு

பிரதானமான நான்கு அரச நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு 185 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிக்கிறார்.

நட்டத்தில் செயற்படும் அரச நிறுவனங்கள் திறைசேரியின் பணத்தில் இயங்குவதற்குப் பதிலாக அவற்றை சுயபலத்தால் இயக்கிச் செல்லத்தக்க நிலைக்கு இட்டுச் செல்வதே அரசின் குறிக்கோள் எனவும் விரைவிலேயே அந்தக் குறிக்கோள் நிறைவேறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகளால் 245 வரையிலான அரச சிறுதொழில் முயற்சிகள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், அவற்றுள் தொழில்துறை மற்றும் நிதித்துறைகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் பெறும் 55 சிறு தொழில் முயற்சிகள் இருப்பதாக அரசு இனங்கண்டிருப்பதாகவும், இவற்றிடையே அபிவிருத்திகள் செயற்பாட்டில் உச்ச மட்டத்தில் பங்களிப்பு வழங்கிவரும் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ், மிஹின் லங்கா, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் நீர் வழங்கல் சபை ஆகிய நிறுவனங்கள் நான்கையும் நடத்திச் செல்வதற்கு திறைசேரியிடமிருந்து நிதித்தொகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் நீர் வழங்கல் சபைக்கு 65 பில்லியன் ரூபாவும், பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு 100 பில்லியன் ரூபாவும்,ஸ்ரீலங்காஎயார்லைன்ஸ்க்கு 125 மில்லியன் அமெரிக்க டொலரும், மிஹின் லங்கா நிறுவனத்துக்கு 25 மில்லியன் அமெரிக்க டொலரும் ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் அவை திறைசேரி உண்டியல்கள் மூலம் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத் தாபனம் 234 பில்லியன் ரூபாவும், மின்சார சபை 54 பில்லியன் ரூபாவும், ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் 124 பில்லியன் ரூபாவும் கடன் பட்ட நிலையில் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனங்கள் சம்பாதித்துக் கொள்ளும் நிதிவருமானங்களின் மீது சுய பலத்தைக் கொண்டு அவற்றை நடத்திச் செல்லக் கூடியதாக அவற்றை மேம்படுத்துவதே பொருத்தம் என்றும், திறைசேரிக்குக் கிடைக்கும் மக்களின் பணத்தில் நடத்திச் செல்வது உவப்பானது அல்ல வென்றும் நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார். (ற-22)

## கட்சி ஆதரவாளர்கள் மீது காத்தான்குடியில் தாக்குதல்

திருகோணமலை, ஓக.18

மட்டக்களப்பு, காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை கட்சியொன்றின் ஆதரவாளர்கள் இருவர் தாக்குதலுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளரான முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவாளர்களே தாக்குதலுக்கு உள்ளா கியுள்ளனர். இந்த ஆதரவாளர்கள் தாக்குதலுக்குள்ளானமை தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்குள் ளான இருவரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற)

## மீசாலை விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு

தென்மராட்சி, ஓக.18

மீசாலை புத்தூர் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பெண்ணொருவரும் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பயனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் சாவடைந்துள்ளார். இந்த விபத்தில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது

கொழும்பிலிருந்து வந்த ஹையஸ் வாகனம் வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதியதில் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த சாரதி உட்பட இருவர் சம்பவ இடத்தில் சாவடைந் தனர். காயங்களுக்கு உள்ளான ஐவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மானிப்பாய் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிறிகாந்தவேல் விஜயமலர் (வயது–61) என்னும் பெண் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இடுப்பெலும்பில் பாதிக்கப்பட்டதால் சிகிச்சை பயனின்றிச் சாவடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இவரின் மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றபதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் நேற்று அறிக்கை தாக்கல் செயதனர்.


பெண்ணின் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திய பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருந்த திருமணத்துக்காகப் பிரான்ஸிலிருந்து வந்தவரை அழைத்துவரச் சென்று திரும்பிய வாகனத்தில் பயணித்த மண மகனின் மாமனும் பெரியதாயாரும் விபத்தில் சாவடைந்ததுடன் மணமகன் உட்பட நால்வர் காயமடைந்திருந்தனர். (ற-9)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் கனகசபை செல்வராஜா

(P.K. Selvarajah) (இளைப்பாறிய தொழில் அதிகாரி)



துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகசபை செல்வராஜா (இளைப் பாறிய தொழில் அதிகாரி (Retired Labourofficer) 15.08.2015 சனிக் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை, அன்னரத்தினம் தம்பதி யரின் பாசமிகு மகனும் (சிரேஸ்ட புதல்வன்) காலஞ் சென்றவர் களான வேலுப்பிள்ளை கந்தசாமி - செல்லமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவபூ சணியின் அன்பு கணவரும் நிலா, பிரபாகரன் (பிரதம பொறியியலாளர், இலங்கை மின்சார சபை - வவுனியா Chief Engineer at Ceylon Electricity Board - Vavuniya), பிரகாஷ் (Canada), நிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரங்கநாதன் (உரிமையாளர் ஸ்ரீ பேக்கரி - மன்னார்) , ஜெயசக்தி, ஸ்ரீஜெகநாயகி, பால குமார் (Assistant Production Manager - Cargills) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜீவ், ரணிஜா (HNB), ராகுல், ரம்யா, அர்ஜின், நிலோஷன், நிதிஷா, நிலக்ஷா, சந்தோஷ், சரண் ஆகியோரின் பாசமிகு பேரனும் மகேந்திரராஜா (Canada), ரத்தினராஜா (Canada), வரதராஜா (France), ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவசீலன், தவமலர் (Canada), உபேந்திரன், ஸ்ரீதரன் (Canada), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் இல, 21, Wymen வீதி, நல்லூர், யாழ்ப் பாணத்தில் (தற்காலிக வதிவிடம்) இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு -
பாலகுமார் - 0777600227
ஸ்ரீரங்கநாதன் - 0252222118

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருஞானசம்பந்தர் ஞானகுரு



கோப்பாயை பிறப்பிடமாகவும் யாழ் அத்தியடியை வசிப்பிட மாகவும் கொண்ட திருஞான சம்பந்தர் ஞான குரு (16.08. 2015) ஞாயிற்றுக் கிழமை காலமாகி விட்டர்.


அன்னாரில் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

104/4 அத்தியடி குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஞா. சுகுமார்(மகன்)

### இராமச்சந்திரன் ரவிச்சந்திரன்

(ரவி கராஜ் உரிமையாளர்)



நாவலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் ரவிச்சந்திரன் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.08.2015) பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0779688010
0770205038

தகவல் -
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி தியாகராசா



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் பள்ளம்புலம் சரவணை கிழக்கை வாழ்விடமாகவும் தற்போது இலக்கம் 16/25 சிவன்வீதி திருநெல்வேலியை (பரமேஸ்வராச்சந்தி) வசிப்பி டமாகவும் கொண்ட திருமதி தியாகராசா மனோன்மணி 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (மூ.நா) தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கந்தையா- செல்லம்மா தம்பதியரின் மருமகளும்,காலஞ்சென்ற தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீபாலன் (லண்டன்), உலகேஸ்வரி, சிவபாலன் (லண்டன்), ஸ்ரீகந்தராசா (அருள்), காலஞ்சென்ற கேதீஸ்வரன்(சோதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருபாநிதி (லண்டன்) , தில்லைநாதன்( தம்பிரான்), கலைமகள் (லண்டன்), மலர்விழி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, மூ.நா. கந்தையா(தலைமை ஆசிரியர்), சின்னம்மா, குமாரசாமி(புலவர்), சண்முக நாதன்(A.F ஓவசியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரன்(சின்னத்துரை), மயில்வாகனம் (ஆசிரியர்), சோமாவதிப்பிள்ளை மற்றும் சிவநாயகி காலஞ்சென்ற விஜயலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற ஜெயலெட்சுமி மற்றும் ஜெகநாதன், குகதாசன் (கனடா)ஆகியோரின் பெரிய தாயாரும் ,காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, சுந்தரமூர்த்தி (கணக்காளர்) ஆகியோரின் சிறிய தாயாரும் சாலினி ,தேவன் இளங்கோ (லண்டன்),கெளரி, திருமகள், காலஞ்சென்ற சூலபாணி மற்றும் மன்றுளாடி, மாலினி(R.D.O நல்லூர்) ,நளாயினி (நோர்வே), உமா (பிரான்ஸ்) ,பிரபாகரன் (பிரான்ஸ்),காலஞ்சென்ற சம்பந்தர்,செல்வலெட்சுமி (அவுஸ் ரேலியா) ஆகியோ ரின் சகோதரர் வழிமாமியாரும் ஜனார்த்தன் (பிரான்ஸ்), கோபிகா(ஆசிரியை- கொக்குவில் இந்துக் கல்லூரி), மகிந்தன்(குவைத்) ,சுதாகன் (லண்டன்), நிரோஜன்(பிரான்ஸ்), கவிந்தன் (லண்டன்), விஜிந்தன் (லண்டன்), சதீஸ் (பிரான்ஸ்), சுஜீத்(பிரான்ஸ் ) சுஜீபா, சுகந்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2015) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் இல.16/25, சிவன் வீதியில்(பரமேஸ்வராச் சந்திக்கு அருகில்) அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பள்ளம்புலம் சோளாவத்தை''வீமன்பிட்டி'' இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.16/25, சிவன்வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்
மருமகன் தில்லைநாதன்(தம்பிரான்)077 559 0312
அருள் (மகன்)
077 896 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந் திருவிழா

தென்மராட்சி, ஓக.18 சாவகச்சேரி செருக்கற்பதி பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. ஆலய பிரதம குரு து.கு.ஜெகதீஸ்வரக் குருக்களின் ஆசியுடன் சிவஸ்ரீ செ.வே. கணேஸ்வரக் குருக்கள் தலைமையில் பெருந் திருவிழாக் கிரியைகள் இடம் பெறும்.

(ந-9)


**சமையல் உதவியாளர் (Kitchen Helper) தேவை**

TILKO

யாழ்நகரின் மத்தியில் அமைந்துள்ள முதல்தர (Hotel அனுபவம் மிக்க சமையல் உதவியாளர் தேவை.

Email: tilko.tilak@gmail.com
T.P. 077 769 6443
Tilko Jaffna City Hotels (Pvt) Ltd
No.70/6, K.K.S.Road,
Jaffna.

(60801)
(45.8.7)

**விற்பனை முகவர்கள் தேவை**

எமது சங்கத் தயாரிப்புக்களான ஐஸ்கிறீம், யோக்கட், மில்க்லொலி (யூஸ்), பதனிட்ட பாலப்பைக்கற், சுவைப்பால் என்பவற்றை விற்பனை செய்வதற்கான முகவர்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு : பொது முகாமையாளர்
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
தொ.பே - 0213212926

**IELTS Special Class**

12th September யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்

- 60 மணி நேர வகுப்பு
- ஆரம்பம் 19-08-2015

* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE




THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384, 0778803887


## நல்லூர் கந்தசுவாமி கோயில் அடியவர்களுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையின் அன்பான வேண்டுகோள்

* நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் உள்வீதியும், வெளிவீதியும் அடியவர்களின்தியான பூமியாகும். அவற்றின் அமைதியைப் பேணி பக்தர்களுக்கு உதவி புரியுங்கள்.
* ஆலயமும் அதன் சூழலும் தூய்மையடையும் போது தான் அடியவர்களின் உள்ளமும் தூய்மையடைந்து இறைவன் அவரவர் உள்ளங்களில் சாந்நித்தியம் கொள்கின்றார். ஆகவே,அப்புனிதமான பகுதிகளில் பாதணிகளுடன் செல்வதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக்கொள்ளவும்.
* அருள்மிகு நல்லூர்க்கந்தனின் திருவிழாவிற்கு வருகைதரும் அடியார்கள் இலங்கைக்கான கலாசார உடையணிந்து எம் சமய, சமுதாய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஆன்மீக உணர்வை மேம்படுத்த உதவிடுவீர்
* முருகப்பெருமானின் பெரும்புகழைப்பாடிப் பணிதலின்றி வேறு செயல்களை ஆலயத்திற்குள்ளும்,ஆலயச்சூழலிலும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
* வெண்மணல் பரப்பிய வீதியிலே அடியவர்கள் அங்கப் பிரதட்சணம்,அடியழித்தல் செய்வதனால் கழிவுப் பொருட்களை, குப்பைத் தொட்டியிலிட்டு வீதியை சுத்தமாக வைத்திருக்க உதவிடுவீர்.
* யாழ். மக்களை மட்டுமின்றி உலகம் வாழ்மக்கள் அனைவரையும் தன் அருட்கண்பார்வையினால் இரட்சித்துக் கொண்டிருக்கும் முருகப்பெருமானை அடியார்கள் இறை சிந்தனையுடன் மனதை ஒருநிலைப்படுத்தி வணங்குவதற்கு ஏதுவாக ஆலயச்சூழலில் உணவகங்கள்,ஒலிபெருக்கிகள்,உணவுதயாரிக்கும் போது ஏற்படும் ஒலிகளை என்பவற்றைக் கட்டுப்படுத்தி அமைதியைக் காத்திடுவீர்.
* ஆலய வெளிவீதிகளில் புனிதம் பேணும் பொருட்டு விளம்பரப்பதாதைகள் அமைப்பதையும், அலங்கார விளக்குகள் அமைத்துக் காட்சிப்படுத்துவதையும் தவிர்த்திடுவீர்.
* ஆலயச்சூழலில் மாமிச உணவு,மதுபானம், புகைப்பிடித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.
* தேர்,தீர்த்தம்ஆகிய திருவிழா நாள்களில் தூக்குக்காவடி நேர்த்திக்கடன் செய்வோர் சுவாமி இருப்பிடத்திற்குச் சென்ற பின்னர் வீதித் தடையினூடாகச் செல்லமுடியும். ஆதலால்,தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் நேரத்தைக் கவனத்திற் கொண்டு அதனால் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.
* ஆண்டவன் முன் அனைவரும் சமம். அலங்காரக்கந்தனின் அருள் அகிலமெங்கும் பரவி சிறப்புறவேண்டுமென இறைவனை வணங்குவோமாக.

யாழ்ப்பாணம்


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**
நவாலி தெற்கு, மானிப்பாயில்
10 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 801 3977

30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள்,கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

**இதோ ஓர் அரிய வாய்ப்பு....!**



இதுவரைக்கும் 2800 முன்பள்ளி டிப்ளோமாதாரிகளை உருவாக்கிய நிறுவனத்தில்கல்வி பயின்று டிப்ளோமாதாரியாக மாறி சாதனை படைத்திட வாரீர் !!!

**ஆறுதல் நிறுவனத்தின் 2015/2016 ஆம் ஆண்டிற்குரிய முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

எமது பலம்
- இரு தேசிய மொழிகளிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில்
- கல்வி அமைச்சு மற்றும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சினால் அங்கீகரிக்கப்ட்ட சான்றிதழ்
- வார இறுதிநாள்களில் விரிவுரைகள்
- பயிற்றப்பட்ட தரமான ஆசிரியர் குழாம்
- நவீன முறையிலான கற்றல் கற்பித்தல் செயன்முறை வகுப்புக்கள்

முன்பள்ளி ஆசிரியர்கள் க.பொ.த.(சா/த) சித்தியுடனும் ஏனையவர்கள், க.பொ.த. உயர்தர சித்தியுடனும் (இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.

உங்கள் விண்ணப்ப படிவங்களை
முன்பள்ளி ஆசிரியர்கள் தமது வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) ஊடாகவும்,

ஏனையோர்
பிரதம நிறைவேற்று அலுவலர், ஆறுதல் நிறுவனம், இல. 51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்

தொடர்புகளுக்கு: 021 221 7092

விண்ணப்ப முடிவுதிகதி: 05.09.2015
உங்கள் விண்ணப்பப்படிவங்களை (www.aruthal.lk) எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்
பயிற்சிக் கட்டணம் = 18,000/=
பயிற்சிக்காலம் 10 மாதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொ.யோகநாதன்

# அநீதிகள் நிலைத்ததாக வரலாறு இல்லை

அரசன் அன்று அறுப்பான், தெய்வம் நின்று அறுக்கும் என்பது தமிழ்ச் சமூகத்தினரின் உறுதியான நம்பிக்கையாகும். 2009 இல் நடைபெற்ற கொடூரமான சம்பவங்களைப் பார்த்த, அறிந்த தமிழ் மக்கள் தமது உள்ளக்குமுறலை வெளிக்காட்ட முடியாமல் பிரமை பிடித்தவர்களாக, மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக, தமது கையாலாகாத்தனத்துக்காக வருந்தியவர்களாக, நியாயத்துக்கான பொறுப்பைத் தெய்வத்திடம் ஒப்படைத்தவர்களாகவே வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர்.

அன்று தமிழ் மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தால், மேலும் ஒரு பகுதியினர் இவ்வுலக வாழ்க்கையை விட்டு கடல் விலங்குகளின் உணவாக வேண்டியிருந்திருக்கும். அவ்வாறான காலத்திலும் சிலர் கதைத்திருப்பார்கள் என்றால், அவர்கள் உயிர் அச்சுறுத்தல் இல்லாமல் செயற்பட்டிருப்பார்கள் என்றால், அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவினது குடும்ப ஆட்சிக்கு வேண்டப்பட்டவர்களாகவே இருக்க முடியும். நந்திக்கடலோரத்தில் முடிவுற்றதாகக் கருதப்பட்ட தமிழர்களுக்கெதிரான போராட்டம் பலமுனைகளிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.


மன்னராட்சிக் காலங்களில், போரில் வெற்றி கொண்ட மன்னர்கள் தாங்கள் வெற்றி கொண்ட நாட்டின் வளங்களைச் சூறையாடுவதில் எவ்வாறு இராணுவத்துக்கு வாய்ப்புக்கள் வழங்கினார்களோ, அந்த வகையிலேயே, நாகரிக உலகத்தில் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையிலேயே, இங்கும் செயற்பாடுகள் அமைந்திருந்தன. மனித உரிமைச் சட்டங்கள், மனிதாபிமானச் சட்டங்கள் அனைத்துமே செயலிழந்த கொடூரமான நாடாகவே இலங்கை இருந்தது. கைது செய்யப்பட்ட வர்கள் விவரமா? கைப்பற்றப்பட்ட சொத்துக்களா? எவையுமே அரசி னுடைய கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக இருக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் மன்னர்களாகவே செயற்பட்டது.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வசதிகள் செய்யப்படவில்லை. குடும்பத்தலைவர்களை இழந்த பெண்கள் உயிர்வாழ்வுக்கான தொழில் வாய்ப்புக்களுக்காக இராணுவப் பண்ணைகளுக்கே செல்லவேண்டியிருந்தது. நிலங்கள் பெரிய அளவில் இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டது. கலாசார, பண்பாடுகளைச் சிதைக்கக்கூடிய வகையில் மது, போதைப்பொருள் பாவனைகள் ஊக்குவிக்கப்பட்டன. இவ்வாறான நிலைமைகளின் தாக்கம் யாழ்ப்பாணத்திலும், வன்னிப் பிரதேசத்திலும் மாறுபட்ட வகையிலேயே இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமது சுயபலத்தில் வாழ்ந்த மக்களுக்கு தாக்கத்தின் வீரியம் தெரியவரவில்லை. யாழ்ப்பாணத்தில் சுயபலத்துடன் வாழாதவர்களும், வன்னியில் வாழ்கின்ற சகல மக்களும் இராணுவக் கட்டமைப்புக்குள்ளேயே வாழ்ந்துள்ளார்கள். இவர்களுக்கு எந்த வகையான சிவில் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய பாதுகாப்புக்களும் இருக்கவில்லை. வன்னிப் பிரதேசத்தில் மக்களுடன் பணியாற்றியவர்கள் வேகமான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை நன்கு புரிந்திருந்தனர்.

> “நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், அமையப் போகின்ற அரசு. தமிழர்களது அரசியல் தீர்வு தொடர்பாக பேசியே ஆகவேண்டும். இந்த நேரத்தில் எம்மால் தெரிவு செய்யப் படும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் ஆளும் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களாயின் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தையில் பல வீனப்பட வாய்ப்பு உள்ளது. தேசியம் சார்ந்து மாறுபட்ட கருத்துடை யவர்களாக இருந்தால்கூட பாதகமாகவே அமையும்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டு வசதியின் அவசியத்தை மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்திய போது அவர், அவர்களே உழைத்து வீட்டைக் கட்டட்டும். இதற்கு அரசிடம் எங்கே பணம் உள்ளது? என்று கேட்டதன் மூலம் தனது மனநிலையைத் தெளிவுபடுத்தியிருந்தார். மஹிந்த கூறியதை சம்பந்தன் வெளிப்படுத்திய போது அவரது முகபாவம் அவரது உள்ளக்கொதிப்பை வெளிக்காட்டியது. தலைமைக்குரிய பண்புடன் காலம் வரும்வரை காத்திருந்தார். கிடைத்த வாய்ப்புகளை உரிய வகையில் பயன்படுத்தி வருகின்றமையை சமூக அக்கறை கொண்டவர்களும், தமிழர்களது எதிர்காலம் தொடர்பாக ஆழமாக பரிசீலிப்பவர்களும் புரிந்து கொள்ள முடியும்.

வலிமையான நிலையில் இருந்து சர்வாதிகாரியாகச் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தேர்தலை நடத்த முன்வந்தமையானது அவர் விதைத்ததை அறுக்கவேண்டிய காலம் நெருங்கியதை உணர்த்தியது. மேலும் சிலகாலம் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி நீடித்திருந்தால் தேசிய இனம், சுயநிர்ணய உரிமை என்ற பதங்களுக்கு சம்பந்தம் இல்லாதவர்களாக தமது இன தனித்துவங்களை இழந்தவர்களாக, இலங்கையில் தமிழ் மக்கள் வாழ வேண்டியிருந் திருக்கும்.



விடுதலைப்புலிகளை அழித்ததான அகம்பாவத்துடன் சிங்கள மக்களின் ஆதரவுடன் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான கூட்டணியில் தமிழ் மக்களது தலைவர் சம்பந்தன் இணைந்தமை ஆச்சரியமானதல்ல. தலைமைகள் இணைந்தமை செயற்படவேண்டிய தவிர்க்க முடியாத தேவை வலுவாகவே இருந்தது. இவ்வாறானதோர் கூட்டுச் செயற்றிட்டம் இந்தியாவினதும், சர்வதேச நாடுகளினதும் வழிகாட்டலிலேயே செயற்பட்டிருக்க முடியும். தமிழ் மக்களது விடியலுக்கான மாற்று வடிவங்களோ, அதற்கு ஆதரவான வேறு சக்திகளோ இல்லாத நேரத்தில், உள்ள வாய்ப்புக்களை முறையாகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் தலைமைகளுக்குள்ளது.



நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், அமையப் போகின்ற அரசு, தமிழர்களது அரசியல் தீர்வு தொடர்பாக பேசியே ஆகவேண்டும். இந்த நேரத்தில் எம்மால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் ஆளும் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களாயின் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தையில் பலவீனப்பட வாய்ப்பு உள்ளது. தேசியம் சார்ந்து மாறுபட்ட கருத்துடையவர்களாக இருந்தால்கூட பாதகமாகவே அமையும். தமிழ் மக்கள் படும் துயரங்களை புரிந்து கொள்ளாமல் ஜனாதிபதித் தேர்தலைப் புறக் கணிக்கும்படி கூறியவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளதும் அவர்களுடன் பலியாகிய மக்களதும் தியாகங்களுடன் போராட்டம் உச்ச வலுவான நிலையிலேயே ஜனநாயக சக்திகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலான வலுவை ஒரு சில போராளிகளால் ஏற்படுத்தி விடவும் முடியாது. இதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் கடந்தகால போராட்ட வரலாற்றையும் பாதிக்கவே செய்யும். விடுதலைப் புலிகளுக்கு தேர்தலில் களம் இறங்கும் மனோபாவம் இருந்திருந்தால் எப்போதோ களம் இறங்கியிருப்பார்கள்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரபாகரனது கொள்கைகளுக்கு துரோகம் செய்து விட்டதாகக் கூறுகிறார்கள். அரசுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விமர்சிப்பதற்கு ஒரு பகுதியினர் தேவை. அந்த வகையில் இவர்களது செயற்பாட்டை அரசு மறைமுகமாக ஆதரிக்கின்றது. இவர்களால் மக்களிடையே சிறிய சந்தேகத்தை ஏற்படுத்த முடியும். அவர்களது செயலற்ற வெறும் பரப்புரைகள் உண்மைகளை அம்பலப்படுத்தும்.

ஆளும் கட்சிகள் இரண்டுமே தமிழ மக்களது அவலங்களுக்கு தாங்கள் எந்த வகையிலும் பொறுப்பற்றவர்கள் போல் அபிவிருத்திகள், தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாகப் பேசுகிறார்கள். தலைவர்கள் நல்லாட்சி தொடர்பாகப் பேசுவது உண்மையாயின் அபிவிருத்திகளும், தொழில் வாய்ப்புக்களும் தகுதியும், திறமையும், தேவையும் உள்ள வகையில் உரிய அரசநிர்வாக அமைப்புக்களால்மேற்கொள்ளப்பட வேண்டிய வையே.

இலங்கை என்ற தீவு எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளைப் புரிந்து கொண்ட தலைவர்கள் தென்னிலங்கையில் இருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை புரிந்து கொண்டுள்ளார்கள். இவற்றுக்கப்பால் இலங்கையின் அரச தலைமைகளுக்கு ஒன்றுபட்ட நாட்டுக்குள், தமிழ் மக்களுக்கான, உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை வழங்க வாய்ப்புத்தரப்பட்டுள்ளது. இதனை உரிய முறையில் பயன்படுத்தாவிட்டால் உலகம் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டிய நிலைக்கு தள்ளப்படும் என்பதை புரிந்து கொள்கிறார்கள்.

தமிழ்த் தலைமைகளின் மெதுவான, உறுதியான, நகர்வுகள் சரியான இலக்குகள் நோக்கி நகர்கின்றன. ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ்மக்கள் தமது சுயாட்சி அதிகாரங்களுடன் வாழ்வதற்கான வாய்ப்பை இலங்கை அரசு வழங்கப்போகிறதா? அல்லது தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து வாழ்வதற்கான முடிவை சர்வதேச பங்களிப்புடன் மேற்கொள்ள அனுமதிக்கப் போகிறார்களா? என்பதனை தீர் மானிக்கும் நாள் தொலைவில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிள் 7 போனில் கிடைக்கும் வசதிகள்



**மொ**பைல் உலகில் எத்தனை நிறுவனங்கள் வந்தாலும், தனக்கென தனி இடத்தை பிடித்துள்ள நிறுவனம் அப்பிள். அப்பிள் மொபைலை கையில் வைத்தி ருப்பதே கௌரவம் என்று கூறும் அளவுக்கு ஒரு நிலையை உருவாக்கிய அதன் தந்திரம் சொல்லில் அடங்காது.

இந்தநிலையில் அப்பிள் நிறுவனம் தனது அடுத்த தயாரிப்பான அப்பிள் 7 மொபைலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சந்தையில் வெளியிட உள்ளதாக உறுதிசெய்யப்படாத தகவல்கள் வெளிவந்தவாறு உள்ளன. இந்தநிலையில் அப்பிள் 7 மொபைலில் என்னென்ன வசதிகள் இருக்கலாம் என்பது பற்றிய சில தகவல்கள் கீழே. அப்பிள் கைகடிகாரம் மற்றும் லாப்டாப்பில் உள்ளது போன்று ஃபோர்ஸ் டச் (Force Touch) என்ற வசதியை அறிமுகம் செய்யக்கூடும் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் திரையில் மெதுவாக தொடும்போது ஒரு அப்ளிக்கேசனும், வேகமாக தொடும்பொது அந்த அப்ளிக்கேசனின் அடுத்தகட்ட செயல்களும் கிடைக்கும். உதாரணமாக, நீங்கள் திரையை மெதுவாக தொடும்போது மின்னஞ்சல் பக்கம் தோன்றும். வேகமாக தொட்டால் மின்னஞ்சலுக்கு பதில் அளிக்கும் பக்கம் தோன்றும். கமராவை பொறுத்தவரையில் பின்பக்கம் 12 மெகாபிக்சல்களும் முன்பக்கம் 4 மெகாபிக்சல்களும் இருக்கக்கூடும். அப்பிள் 7இன் திரை முந்தைய அப்பிள் 6 மற்றும் 6 பிளஸ் மொடல்களின் திரையை விட பெரிதாக இருக்கும். மேலும் ஹோம் பட்டனில் அப்பிள் லோகோவும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடைசியாக ஒரு தகவல். எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதி அப்பிள் 7 அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. அதிகாரபூர்வ தகவல்கள் வரும்வரை இந்த மாதிரி எத்தனையோ தகவல்கள் முளைத்துகொண்டே இருக்கும் என்பது மட்டும் நிஜம்.



# 'பட்ஜெட்' விலையில் அறிமுகமானது

## Xiaomi Redmi 2 Prime

Xiaomi நிறுவனமானது Redmi 2 Prime எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. 110 டொலர்கள் பெறுமதியான இக்கைப்பேசியானது 4.7 அங்குல அளவு, 720 x 1280 Pixel Resolution உடைய IPS தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 64-bit 1.2GHz Qualcomm Snapdragon 410 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16 GB சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும் இரட்டை சிம் வசதி, 4G தொழில்நுட்பம், 2200mAh போன்றவற்றையும், 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றி னையும் கொண்டுள்ளது.




# வந்துவிட்டது வோக் கார்

ஜப்பானில் கோகோ மோட்டார்ஸ் என்ற நிறுவனம் பற்றரியில் இயங்கும் வோக் கார் (Walk Car) ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. பற்றரியில் இயங்கும் இந்தக் கார் ஒரு மணி நேரத்தில் 6 கிலோ மீற்றர் வரை செல்லும்.

பார்ப்பதற்கு மடிக்கணினி வடிவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வோக் காரில் நான்கு சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் நாம் நடந்து செல்லும் வசதிக்கேற்ப இதனை திருப்பிக் கொள்ளலாம்.







வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பளை சிறி துர்க்கையம்மன் ஆலய வருடாந்த கொடியேற்ற நிகழ்வு 'நேற்று திங்கட் கிழமை பகல் மிகவும் பக்திப் பரவசமாக இடம் பெற்றது.

அடியார்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் ஆலயத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ எஸ்.அகிலேஸ்வரக்குருக்கள் கொடியை ஏற்றி வைத்தார் காலையில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.(ற-86)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk

# அபுதாபியில் மோடிக்கு வரவேற்பு





அபுதாபி,ஓக.18
இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு அபுதாபியில் நேற்று முன்தினம் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின் போது வர்த்தகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குறித்து அந்த நாட்டின் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ள மோடி, இந்தியாவை முதலீட்டுக்கான சிறந்த இடமாகவும் முன்னிலைப்படுத்தவுள்ளார். அபுதாபி சென்றடைந்துள்ள பிரதமர் மோடி அது குறித்து தனது ரூவிற்றர் வலைப்பதிவில் குறிப்பிடுகையில், இந்தப் பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேம்படும் என உறுதியாக நம்புவதாக தெரிவித்துள்ளார். இதையே அவர் அரபு மொழியிலும் பதிவு செய்துள்ளார். 34 வருடங்களுக்குப் பின்னர் அபுதாபிக்கு செல்லும் இந்தியப் பிரதமரான மோடியை அபுதாபியின் இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜயித் அல் நஹ்யான் மற்றும் அவரது ஐந்து சகோதரர்களும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

மரபுகளை மீறி கடந்த மே மாதம் மொராக்கோ மன்னரை வரவேற்ற அவர்கள், தற்போதும் மரபை மீறி பிரதமர் மோடியை வரவேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அபுதாபி இளவரசர் நேரில் வந்து தம்மை வரவேற்று இருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தும் மோடி ரூவிற்றரில் பதிவு செய்துள்ளார். இந்தப் பயணத்தின் முதல் கட்டமாக பிரதமர் மோடி அங்குள்ள ஷேக் சயீத் பெரிய மசூதிக்குச் சென்றார். இஸ்லாமிய கட்டடக் கலைக்கான எடுத்துக்காட்டாக கருதப்படும் அந்த மசூதி உலகின் மூன்றாவது பெரிய மசூதி யாக கருதப்படுகிறது. ஐக்கிய அரசு எமிரேட்டின் முதல் ஜனாதிபதியின் பெயரில் இந்த மசூதி அமைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அவர் ஐ–கேட் என்ற இடத்தில் உள்ள இந்தியத் தொழிலாளர்களைச் சந்தித் துப் பேசினார். அபுதாபியின் இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜயித் அல் நஹ்யான் உள்ளிட்ட தலைவர் களை நேற்றுச் சந்தித்து இருதரப்பு உறவுகள், பயங்கரவாத எதிர்ப்பு, எரிசக்தி ஒத்துழைப்பு உள்ளிட் டவை குறித்த பேச்சுக்கள் நடைபெற் றுள்ளன. மோடியின் வருகையை முன்னிட்டு அங்கு. பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## ஜேர்மனியில் புலம்பெயர்வோர் பிரச்சினைகள் பெரும் சவால்


### ஜனாதிபதி ஏஞ்சிலா மெர்கல் தெரிவிப்பு



பெர்லின்,ஓக.18
ஜேர்மனியில் குடியேறுபவர்களின் பிரச்சினை பெரும் சவாலாக இருப்பதாகவும், இந்த வருடம் மட்டும் ஜேர்மனியில் அகதிகளின் குடியிருப்புகள் மீது 200 இற்கும் அதிகமான தாக்குதல்கள் நடைபெற்றிருப்பதாகவும் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சிலா மெர்கல் தெரிவித்துள்ளார். முன்னெப்போதும் இல்லாதவாறு ஐரோப்பாவில் புலம் பெயரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும், இது கிரேக்க நாட்டின் கடன் நெருக்கடியை விடவும் சிக்கலானது எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இந்த வருடம் ஜேர்மனியில் குடியேற விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோர் தென்கிழக்கு ஐரோப்பிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளவர்கள் எனவும், குறிப்பாக அல்பேனியா, போஸ்னியா, பல்கேரியா, குரோஷியா, கொசோவோ, மாசிடோனியா, மாண்டினீக்ரோ மற்றும் செர்பியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வரையப்பட்ட ஓவியம் போல் காட்சியளிக்கும் கிராமம்



மெக்ஸிக்கோ,ஓக.18
மெக்ஸிக்கோவில் ஒரு மலை மீது அமைந்துள்ள லாஸ் பல்மிடஸ் என்ற கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு ஒரே விதத்தில் புதிதாக வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்னர்,அந்த வீடுகள் வர்ணங்கள் அடிக்கப்படாமலும் அழுக்கடைந்தும் பார்க்கப் பயங்கரமாக வறட்சியாகவே காட்சியளித்தன. ஜேர்மனியின் என்ற வர்ணம் தீட்டும் கலைஞர்கள் குழு, இந்தக் கிராமத்தினுடைய ஏழ்மையான தோற்றத்தை மாற்றுவதற்காக கிட்டத்தட்ட 14 மாதங்கள் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளனர்.

சுமார் 200 வீடுகளினதும் சுவர்களில் பிரகாசமான நிறங்கள் வர்ணங்களாகத் தீட்டப்பட்டு உலகை கவரும் அளவில் அந்தக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு நகரத்திலும் ஒரே நேரத்தில் எல்லா வீடுகளுக்கும் வர்ணம் அடிக்கப்படுவதில்லை. இங்கு ஒரே சமயத்தில் 200 இற்கும் மேலான சுவர்களில் ஆயிரத்து 500 சதுர மீற்றர் பரப்பளவில் வர்ணம் பூசப்பட்டு அழகான ஒரு கிராம ஓவியம் போல காட்சியளிப்பதால் இது உலகுக்கு புதிய அனுபவமாகவுள்ளது. (ஐ)

## பங்களாதேஷில் சிறுவனை அடித்துக் கொன்ற கும்பல் கைது



டாக்கா, ஓக.18
பங்களாதேஷில் சைக்கிள் திருடியதாக குற்றஞ்சாட்டி 13 வயது சிறுவனொருவனைப் பிடித்துப் பொது இடத்தில் கட்டி வைத்து, அவனை அடித்து, உதைத்து, அணுஅணுவாக சித்திரவதை செய்து கொன்ற காட் சியை இணையத்தில் வெளியிட்ட கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடகிழக்கு பங்களா தேஷில் காய்கறி விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்த அந்தச் சிறுவனைச் சைக்கிள் திருடிய தாக குற்றம்சாட்டிப் பிடித்த 13 பேர் ஒன் றாக சேர்ந்து அவனை அடித்து, உதைத்து, துன்புறுத்திய காட்சிகளை வீடியோவாகவும் பதிவு செய்துள் ளனர். வலி தாங்காமல் அந்தச் சிறுவன் அலறித் துடிப்பதையும், இரத்தக் காயங்களுடன் சோர்ந்துப் போய் அவன் தாகத்துக்கு தண்ணீர் கேட்பதையும், பார்த்து ஆனந்தப்பட்டு அந்தக் கும்பல் வெறித்தனமாகச் சிரிக்கும் காட்சியும், மயக்க நிலையில் கிடந்த சிறுவன் உயிரிழக்கும் காட்சியும் அடங்கிய 28 நிமிட வீடியோவை அந்த சமூகவிரோதக் கும்பல் இணையத்தில் வெளியிட்டு மகிழ்ந்தது. சமூக வலைத்தளங்களின் மூலமாக உலகில் உள்ள கோடிக்கணக்கான மனிதநேயம் மிக்கவர்களை உலுக்கி எடுத்த அந்த வீடியோ காட்சியில் உள்ள கொலைப்பாதகர்களை உடனடியாக கைது செய்ய் வேண்டும் என பங்களாதேஷில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதையடுத்து, அவர்களில் 12 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தக் கொடூரப் படுகொலையின் முக்கிய குற்றவாளியான நபர் சவுதி அரேபியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார். இதற்கிடையில், இந்தப் படுகொலை தொடர்பாக கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள 12 பேர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்துள்ளனர். சாவடைந்த அந்த 13 வயதுச் சிறுவனின் பெயர் சமியுல் இஸ்லாம் ரஜவுன் என்றும், அவனது உடலில் 28 பகுதிகளில் ஏற்பட்ட உள்காயங்களால் உண்டான இரத்தக் கசிவினால் அவன் உயிரிழந்ததாகவும் உடல் கூற்றுப்பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கின்னஸ் சாதனை படைத்த பூனை

நியூயோர்க், ஓக.18
சாதாரணமாக, ஒரு பூனையின் ஆயுள் காலம் 12 முதல் 15 ஆண்டுகள் ஆகும்.

ஆனால் அமெரிக்காவில் ஒரு பூனை 26 வயது வரை உயிர் வாழ்கிறது. அமெரிக்காவின் ஓரி கானில் உள்ள இந்தப் பூனைக்கு "காா்டூராஸ்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பூனையை ஆஸ்லி ரீட் ஒகுரா என்ற பெண் வளர்த்து வருகிறார். தற்போது இந்தப் பூனைக்கு 26 வயது ஆகிறது. இதன் மூலம் உலகிலேயே அதிக காலம் வாழும் பூனை என்ற கின்னஸ் சாதனை படைத்துள்ளது. ஏற்கனவே கடந்த 2014 ஆம் ஆண்டு அதிக காலம் வாழும் பூனை என கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம்பெற்ற பூனை அண்மையில் இறந்து விட்டது. அதை தொடர்ந்து தற்போது கார்டூராஸ் பூனை இந்தப் பட்டத்தை வென்றுள்ளது. (ஐ)

## 34 வருடங்களின் பின்னர் குற்றமற்றவராக விடுதலை

அமெரிக்காவில் சுமார் 34 வருடங்களாக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்தவர் குற்றவாளி அல்ல எனத் தற்போது நிரூபணமாகியுள்ளது. அமெரிக்காவின் பென்சில்வேனியாவைச் சேர்ந்த லூயிஸ் போகல்(63) கடந்த 1976 ஆம் ஆண்டு டீன் லாங்(15) என்பவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி கொன்ற குற்றத்துக்காக நண்பர்கள் மூவருடன் 1981 ஆம் ஆண்டு கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார். மனநோயாளியின் சாட்சிப்படி கைது செய்யப்பட்ட அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் செய்யாதவர்களுக்கு தவறாக தண்டனை அளிக்கப்படும் போது, அந்த அப்பாவிகளுக்காக போராடி அவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்றும் அமைப்பு ஒன்று லூயிஸ் இற்கும் உதவ முன்வந்தது. டீன் லாங்கின் பாலியல் வன்முறை வழக்கில் ஆதாரமாக இடம்பெற்றிருந்த மரபணுத் தகவல்களை ஆய்வு செய்து அதில் லூயிஸுடைய மரபணு இடம்பெறாத காரணத்தால் அவர் பாலியல் வன்முறை மேற்கொள்ள வில்லை என்று அந்த அமைப்பு நிரூபணம் செய்துள்ளது. எனினும், அவர் அந்தப் பெண்ணின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதனால், அது குறித்து மறு ஆய்வு செய்து எதிர்வரும் செப்ரெம் பர் மாதம் இதுதொடர்பான தீர்ப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அவருடன் கைது செய்யப்பட்ட மற்ற மூவரும், தெளிவான ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு விட்டனர். கடந்த 34 வருடங்கள் சிறைத் தண்டனைக்குப் பின்னர் தற்போது தான் லூயிஸ் முதன்முறையாக பிணையில்; விடுவிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பிரேஸில் நாட்டில் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதில் டில்மா ரூசோப் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானார். அவருக்கு அண்மைக் காலமாக மக்கள் மத்தி யில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. அவரது ஆட்சியில் 25 வருடங்களில் இல்லாத அளவுக்கு ஊழல், முறைகேடு மற்றும் பொருளாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. எனவே அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரேஸிலில் நேற்று முன்தினம் பல இடங்களில் பேரணிகள் நடைபெற்றன. அவற்றில் சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் பங்கேற்றனர். (ஐ)

# மாயமான இந்தோனேஷிய விமானம் மலையில் மோதி நொறுங்கியது

## 54 பேர் மாயம்: பாகங்கள் கண்டுபிடிப்பு

ஜகார்த்தா,ஓக.18

இந்தோனேஷியாவில் இருந்து 54 பேருடன் புறப்பட்டுச் சென்ற விமானம் திடீரென மாயமானதை அடுத்து அந்த விமானத்தைத் தேடும் பணி மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தது. இந்த நிலையில் அந்த விமானம் மலையின் மீது மோதி விபத்துக்குள்ளானது எனவும் அதன் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் அந்த நாட்டின் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.


இந்தோனேஷியாவின் ஜெயபுரா நகரில் உள்ள சென்தானி விமான நிலையத்தில் இருந்து பப்புவா மாகாணத்தில் உள்ள ஒக்சிபில் நகருக்கு நேற்று முன்தினம் ஒரு விமானம் புறப்பட்டுச் சென்றுள்ளது. திரிகானா விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான ஏ.டி. ஆர். 42300 ரகத்தை சேர்ந்த அந்த விமானத்தில் 5 சிறுவர்கள் உட்பட 49 பயணிகள் மற்றும் 5 ஊழியர்கள் என மொத்தம் 54 பேர் பயணம் செய்துள்ளனர். பப்புவா பிராந்தியத்தில் அடர்ந்த வனப் பகுதிக்கு மேலே அந்த விமானம் பறந்து கொண்டிருந்தபோது, அதனுடன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அந்த விமானம் திடீரென்று மாயமானது. அதனைத் தொடர்ந்து இந்தோனேஷிய தேடுதல் மற்றும் மீட்புக்குழுவினர், காணாமல் போன விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.



இந்த நிலையில் அந்த விமானம் இந்தோனேஷியாவின் பப்புவாவில் ஒக்பேப் என்ற மாவட்டத்தில் உள்ள மலையில் மோதி விழுந்ததாகவும் அதன் பாகங்களைக் கண்டெடுத்துள்ளதாகவும், அந்த நாட்டின் விமானப் போக்குவரத்து அமைச்சர் சுப்ரசெத்யோ தெரிவித்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட பாகங்களை அதிகாரிகள் பரிசோதித்து வருகின்றனர். ஆனால் விமானத்தில் பயணம் செய்த எவராவது உயிர் பிழைத்தார்களா? என்பது குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஏர் ஏசியா பயணிகள் விமானம் 162 பயணிகளுடன் இந்தோனேசியாவின் சுரபயாவில் இருந்து சிங்கப்பூர் சென்றபோது விபத்துக்குள்ளாகி அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர். இதையடுத்து, விமானப் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஒரு விமான விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சுற்றுலாப் பயணிகளை கவர்ந்தது பேர்லின்

பேர்லின்,ஓக.18

ஐரோப்பாவின் 5 பிரதான சுற்றுலா நகரங்களில் ஜேர்மன் தலைநகர் பேர்லின் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.

பிரிட்டன் முதல் இடத்திலும், பரிஸ் இரண்டாம் இடத்திலும் உள்ளன. இந்த நகரங்களையும் முந்திச் செல்ல வேண்டும் என்பதே பேர்லின் நகரின் நோக்கம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஜேர்மனியின் தலைநகர் மீண்டும் ஒரு முறை இந்த வருடம் அதிகமான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் கடந்த ஜூன் மாதம் வரை பேர்லின் ஹோட்டல்களில் 13.8 மில்லியன் பேர் தங்கியிருந்துள்ளனர். (ஐ)

## சிரியப் படைகள் விமானத் தாக்குதல்; 82 பேர் சாவு: 200 பேர் படுகாயம்

டமாஸ்கஸ்,ஓக.18

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ்ஸுக்கு அருகே அரச படைகள் நேற்று நடத்திய தாக்குதலில் 80 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த தோஹா பகுதியில் அரச படைகள் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தாக்குதலில் சுமார் 82 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனவும், 200 பேருக்கு அதிகமானவர்கள் படுகாயம் அடைந்திருப்பதாகவும் சிரியாவில் செயற்படும் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தக் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பொது மக்கள் எனவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.



காயம் அடைந்தவர்களில் பலரின் நிலைமை மிகவும் கவலைகிடமாக உள்ளதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

# அமைச்சரின் அலுவலகத்தில் மனித வெடிகுண்டுத் தாக்குதல்

## அமைச்சர் உட்பட 10 பேர் துடிதுடித்துச் சாவு

லாகூர்,ஓக.18

பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாண உள்துறை அமைச்சரின் அலுவலகத்தில் நடந்த மனித வெடிகுண்டுத் தாக்குதலில் உள்துறை அமைச்சர் உட்பட 10 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண உள்துறை அமைச்சராகப் பதவி வகிப்பவர் சுஜா கான்ஜாதா. அவரது அரசியல் அலுவலகம், அட்டோக் அருகில் உள்ள ஷாதிகான் என்ற இடத்தில் உள்ளது. நேற்று முன்தினம் மதியம் அலுவலகத்தில் தனது ஆதரவாளர்களுடன் அவர் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தார். அப்போது பலத்த சத்தத்துடன் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்துள்ளது. அதில் அந்தப் பகுதி ... இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்ட...

...ஜாதா உட்பட 10 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 25 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி படுகாயம் அடைந்ததாகவும் முதல் கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குண்டு வெடிப்புத் தொடர்பான தகவல் அறிந்ததும், மீட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸார் விரைந்து சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.




வெடிகுண்டுகளை உடலில் கட்டி வந்த ஒருவர், மனித வெடிகுண்டாக மாறித் தாக்குதல் நடத்தியதாக முதல் கட்டத் தகவல்கள் தெரிவித்...

...தான் இராணுவத்தின் நகர் ... தேடுதல் மற்றும் மீட்புப் படை... சம்பவ இடத்துக்கு விரைந் துள்... பாகிஸ்தானை உலுக்கியுள்ள ... தப் பயங்கரத் தாக்குதலுக்கு, பி... நவாஸ் ஷெரீப், கடும் கண்... தெரிவித்துள்ளார். இதேபே... பாகிஸ்தான் மக்கள் கட்சி... தலைவர் பிலாவல் பூட்டோ ச...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பில் பொதுமக்கள்











## மத்திய நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படும் வாக்குப் பெட்டிகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ் சேவையினால் பாதிக்கப்படும் மக்கள்

அனலைதீவு மக்களின் நலன் கருதி இன்று வரை இலங்கை போக்குவரத்துச் சபை, கண்ணகை அம்மன் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான இருவழி பஸ் சேவையை திருப்திகரமாக வழங்கி வருகின்றது. அத்துடன் அனலை தீவிலும் ஒரேயொரு இலங்கை போக்குவரத்து சபை பஸ் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தச் சேவைக்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் எமது அனலைதீவு மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றார்கள்.

அவையாவன:-

1. பற்றுச்சிட்டை வழங்காமல் மாறுபட்ட கட்டணம் அறவிடப்படுகின்றது.

2. காலையில் மட்டும் ஒரு வழிப்பாதைச் சேவை இடம்பெறுகின்றது.

3. தனியார் பஸ்கள் கண்ணகை அம்மன் துறைமுகத்தில் சேவையை ஆரம்பித்து 30 நிமிடங்களுக்கும் மேலாக ஊர்காவற்றுறையில் தரித்து நின்று யாழ்ப்பாணம் செல்கின்றன. இதனால் அன்றைய தினம் ஆற்ற வேண்டிய கருமங்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள முடியாமல் அனலைதீவுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

4. தனியார் பஸ்கள், விசேட பஸ் பயண வாய்ப்புக் கிடைக்கும்போது கண்ணகை அம்மன் துறைமுகத்துக்குரிய சேவையை எவ்வித முன்னறிவிப்புமின்றி இடைநிறுத்து கின்றன.

5. தனியார் பஸ்ஸில் அதிகளவு பயணிகள் நெருக்கமாக ஏற்றிச் செல்லப்படுவதால். குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிபர்கள் மிகவும் பாதிப்படைவதுடன் ஒன்றரை மணிநேரத்துக்கு மேலாகப் பயணிக்க வேண்டி யுள்ளது.

மேற்படி விடயங்களை அனலைதீவிலுள்ள பயணிகள் நலனோம்புச் சங்கம் ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்குத் தெரிவுபடுத்தியதால் தனியார் பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இ.போ.ச. பஸ்ஸில் பயணத்தை மேற்கொள்ளலாம் எனவும் கூறினார்கள். அவர்கள் கூறியது போன்று தனியார் பஸ் சேவை நிறுத்தப்பட்டு அனலைவாழ் மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் இ.போ.ச. பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டு வந்தனர். தற்பொழுது இ.போ.ச. பஸ்ஸானது யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் கண்ணகை அம்மன் துறைமுகத்துக்கு வருகை தருகின்றது. ஆனால் அனலைதீவில் இருந்து படகு மூலம் கண்ணகை அம்மன் துறை முகத்துக்கு வருகை தரும் பயணிகளை யாழ்ப் பாணத்துக்கு ஏற்றிச் செல்லும் சேவையை மேற்கொள்வதில்லை. எங்களுடைய வேதனைகளைக் கவனத்தில் கொள்ளாமல் தனியார் பஸ்ஸுக்கு அனுமதி வழங்கியதை நினைத்து நாங்கள் கவலையடைகின்றோம்.

தனியார் பேருந் தின் சேவையை நிறுத்தி மீண்டும் இ.போ. பஸ் சேவையை கண்ணகை அம்மன் துறைமுகத்தி லிருந்து மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டுதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உண்மையுள்ள அனலைதீவு மக்களுடன்
**ஜே.கே.அதீஸன்.**

# வீதியைத் திருத்தித், தார் போட்டுத் தருமாறு கோரிக்கை




முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீரூற்றுக் கிராமத்துக்கும் குமுழமுனைக் கிராமத்துக்கும் இடைப்பட்ட தூரம் 6 மைல்கள் ஆகும். இந்த 6மைல் தூரமான பாதை போருக்கு முன்னர் வீதியாக இருந்தது. போரின் கொடூரத்தைத் தாங்க முடியாமல் இப் பாதை சுக்குநூறாக உடைந்து போனது. போர் முடிந்து 6 வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் மேற்படி தண்ணீரூற்று - குமுழமுனை வீதி திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காட்சி தருவதோடு மழைகாலத்தில் தண்ணீர் தேங்கி நிற் பதால் மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டப்படு கின்றாகள். ஆகவே அரசும் வீதி அபிவிருத்தி தொடர்பான அதிகாரிகளும் இந்தப்பகுதி மக்கள் மீது கருணை கூர்ந்து மேற்படி பாதையை திருத்தித் தார் போட்டுத் தர வேண்டுமென்று மக்கள் கோருகின்றார்கள்.

**கா. தவபாலன்,** கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை.

## கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# காத்திருக்கும் பெரும் சவால்

சுதந்திர இலங்கையின் 15ஆவது பொதுத் தேர்தல் பாரதூரமான சம்பவங்களின்றி அமைதியாக நடைபெற்றது.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும்போது நேற்றைய தேர்தல் இலங்கை விவகாரங்களில் அக்கறை கொண்ட இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளால் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. தேர்தல் நடைபெறுவதற்கான இறுதி நாள் வரை அரசியல் களம் மிகவும் சூடாக இருந்தபோதிலும் தேர்தலை அமைதியாக நடத்தியதற்கான பெருமை தேர்தல்கள் ஆணையாளரையே சாரும்.

கடந்த காலங்களைப் போலன்றி தேர்தல் சட்டங்கள் இம்முறை ஓரளவு சரியான முறையில் பின்பற்றப்பட்டதை அவதானிக்க முடிந்தது. தேர்தல்கள் ஆணையாளர் தனது கடமைகளை இயன்றளவு சரியாகச் செய்துள்ளார். அவருக்கு அரசியல் தலையீடுகள், அழுத்தங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. இதேபோன்று பொலிஸாரும், படைத்தரப்பினரும் தமது கடமைகளைச் சரியாக நிறைவு செய்துள்ளனர். கடந்த காலத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது மிகவும் புதிய சூழ்நிலையில் நேற்றைய தேர்தல் நடந்து முடிந்துள்ளது. ஜனநாயகத்தின் மிகவும் பெரிய ஆயுதமான வாக்குரிமை தெற்காசியாவின் பல நாடுகளில் வலுவிழந்துள்ள போதிலும், இலங்கையில் அது தொடர்ந்து பலமான இடத்தில் இருப்பது மகிழ்ச் சியளிக்கிறது. இது இலங்கையின் ஜனநாயக பாரம்பரியங்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். இலங்கையின் ஜனநாயக பாரம்பரியங்களைப் பாதுகாக்க அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

ஜனநாயக பாரம்பரியங்களை நாம் தொடர்ந்து பாதுகாப்பதற்கு நாட்டில் அமைதி, சமாதானம் நிலவுவது அவசியமாகும். புதிய அரசு உடனடியாக எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள் பல உள்ளன. இவற்றுள் முக்கியமான சவாலாக இருப்பது, இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுமே. மற்றையது இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் சிறுபான்மை இனங்களான தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அன்னம் சின்னத்தில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஆதரவாக வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்தனர். எனினும் அன்றாடப் பிரச்சினைகள் சில தீர்க்கப்பட்டனவே தவிர அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. ஐ.தே.க. தலைமையிலான ஆட்சி ஏற்படும் என்ற எதிர்பார்ப்புடன், தேர்தலின் பின்னர் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் என்று கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று இரு பிரதான கட்சிகளும் வாக்குறுதி அளித்துள்ள போதிலும், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை பொலிஸ் - காணி அதிகாரங்களுடன், வடக்கு - கிழக்கு இணைப்புடன் முழுமையாக செயற்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு இரு பிரதான கட்சிகளும் ஆட்சியில் இருந்துள்ளன. அப்பொழுது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த இந்தக் கட்சிகள் அக்கறை செலுத்தவில்லை. தற்பொழுது பொதுத் தேர்தலை முன்னிட்டு இரு பிரதான கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் 13 மீண்டும் இடம்பெற்றுள்ளது. சமஷ்டிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில், தற்பொழுது தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளிடமும் எஞ்சியிருப்பது 13 தான். 13ஆவது அரசமைப்புத் திருத்தம் இலங்கையின் அரசமைப்பில் ஏற்கனவே உள்ளது. ஆகவே 13க்கு அப்பால் சென்று இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண புதிதாக பதவிக்கு வரும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## அடுத்து வரும் அரசியல் நகர்வு எவ்வாறு அமையப் போகிறது?

இன்றைய நாள் மதியத்துக்கு முன்னர், இந்த நாட்டின் அடுத்த ஐந்து வருடத்துக்கான ஆட்சியாளர்கள் யார், என்பது பெரும்பாலும் தெரிய வந்துவிடும்.

நாட்டிலுள்ள இரண்டு பெரும் தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றும், தங்களுக்குத்தான் வெற்றி கிடைக்கப் போகிறது என்பதாக பெரும் ஆவலுடன் முடிவுகளுக்குக் காத்திருக்கின்றன. அதே வேளை, இந்த இரண்டு கட்சிகளையும் சேர்ந்த மூன்று தரப்புக்கள் தங்கள் பக்கமே வெற்றி விருது சாய வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பது பகிரங்க இரகசியம்.

இந்த மூன்று தரப்புக்களில் ஒன்று, ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்துடன் சிறுபான்மை அரசொன்றை கையேற்று ஆட்சிபுரிந்து வந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஐ.தே.கட்சியும் ஆகும். அடுத்தது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேனவும் அவரை ஆதரித்து நிற்கும் அதே கட்சியின் ஒரு பகுதியினரும் ஆவர். மூன்றாம் தரப்பும் அதே கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள், கடந்த ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டு சிங்கள - தமிழ் - முஸ்லிம் பெரும்பான்மையினரால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவும், அவர் தலைமையில் ஒன்று கூடியுள்ளவர்களுமாவர்.

முதல்தரப்பு அறுதிப் பெரும்பான்மை பெறும் பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராவதும், உறுதியான அரசு ஒன்றை அமைப்பதும் சிக்கல் இன்றி நடந்தேறும். அது நடைபெறாமல் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுமாயின் சில பல சிக்கல்களை நாடு எதிர்நோக்கும்போல் தெரிகின்றது. ஏனென்றால், அத்தகைய ஒரு நிலையேற்படுமானால், ராஜபக்ஷவை பிரதம மந்திரியாக தாம் நியமிக்கப் போவதில்லை, கட்சியிலுள்ள முதுநிலை உறுப்பினர் ஒருவரையே பிரதமராகத் தெரிவு செய்வார் என்று ஜனாதிபதி சிறிசேன பகிரங்கமாக மட்டுமன்றி மஹிந்த ராஜபக்ஷவுக்கே நேரடியாக கடிதம் மூலமும் அறிவித்திருக்கிறார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தரப்பினருக்கு பெரும்பான்மை கிடைக்குமெனில்,-- அவ்வாறு நடக்குமென்றே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்-- ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரி, பிரதமராக நியமிக்க மறுக்கும்பட்சத்தில், ராஜபக்ஷவுக்கு ஒத்துழைக்காதவர்கள் சிறிசேனவின் பக்கம் சாய்ந்து அவர் சொற்படி செயற்படும்நிலை ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அவ்வாறு இல்லாமல், ராஜபக்ஷவுக்கே பெரும்பான்மை என்ற நிலை உருவாகும்பட்சத்தில், சிறிசேன ஜனாதிபதி என்ற முறையில் தனக்குள்ள அதிகாரத்தை கையில் எடுக்கும் நிலைவரும்.

அரசமைப்பின் பிரகாரம் பிரதமரை நியமிக்கும் அதிகாரம் எப்படி இருக்கும் என்பதை ஜனவரி 8 ஆம் திகதி பார்த்தோம். பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் எவர் என்று தாம் கருதிய ஒருவரை, நாடாளுமன்றில் சிறுபான்மை கட்சியின் தலைவராக இருந்த நிலையிலும், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்திருந்தார் மைத்திரி. அந்த வகை சார்ந்து புதிதாக உருவாக்கப்பட உள்ள நாடாளுமன்றத்திலும் நடக்குமா என்பது கேள்விக்குறியே. இருப்பினும் பெரும்பான்மை பெறுகிறவர்களின் புறக்கணிப்புக்களும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அதிகரிக்கலாம். பொதுவில் பிரதமர் பதவியில் அமர்த்தப்படுபவர் பொருத்தமானவர் என்று ஜனாதிபதி கருதினாலும், நாடாளுமன்றம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஒரு நிலை.

இன்னொரு விதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மைத்திரி சார்பு தரப்பினர் ராஜபக்ஷவை ஓரங்கட்டும் நிலை ஏற்படும் பட்சத்தில், எதிர்த்தரப்பினருடன் அவர்களை இணைத்து தேசிய அரசொன்றுக்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்யக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

இவ்வாறு சிக்கல் மிகுந்ததாகக் காணப்படும் அரசியல் நிலைமையை எவ்வாறு சாணக்கியமாக தீர்த்து வைக்கப் போகிறார் மைத்திரிபால என்பது வரும் நாள்களில் தெரியவரும்.

அவரது 40வருட கால அரசியல் அனுபவத்தின் மூலமான அரசியல் அனுபவமும், அதற்கு மேலான ராஜ தந்திர நகர்வும் வெளிப்பட வேண்டிய கால கட்டம் இது.

அடுத்துவரும் நாள்களில், நாட்டின் அரசியல் நகர்வுகள் மிக சுவாரசியமானவை ஆகவும், சகலரது கவனத்தைக் கவர்வனவாகவும் இருக்கப் போகின்றன.

# தமிழர் அரசியலில் தூய்மைக்கே முதலிடம்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவது யார் என்பதற்கான போட்டி . அரசியல் களத்தில் தீவிரமாக எழுந்திருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பையே அசைக்க முயன்றவர்கள் கூட, தமிழ்த் தேசியம் பேசியவாறு, இந்தத் தேர்தலில் வெற்றிபெற நினைக்கின்றனர்.

இதனால், நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் மக்கள் எவரைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப் போகின்றனர் என்ற எதிர்பார்ப்பு நிறையவே காணப்பட்டது.

ஏற்கனவே கடந்த பல ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தொடர்ந்தும் அந்த அங்கீகாரம் கிடைக்குமா? அல்லது புதியதொரு தலைமைத்துவத்தை உருவாக்கும் புறச்சக்திகளின் திட்டமிடலுக்கு மக்களின் அங்கீகாரம் கிடைக்குமா? என்பதே அதிகளவில் எதிர்பார்க்கப்பட்ட விவகாரமாகும்.

இலங்கையில், வடக்கு கிழக்கில், மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இயல்பான அரசியல் வளர்ச்சி என்பது இல்லாத ஒரு சூழலே நிலவியது.

ஆயுதப் போராட்ட சூழல், தமிழ் மக்களை ஜனநாயக அரசியல் களத்தில் இருந்து விலகி நிற்கச் செய்தது.

ஆயுத மோதல்கள் முள்ளிவாய்க்காலில் 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த பின்னர் தான், வடக்கு, கிழக்கு முழுமைக்குமான ஒரு ஜனநாயக அரசியல் செயற்பாட்டுச் சூழல் மீளத் தலையெடுத்தது.

இந்த ஐந்து ஆண்டுகாலத்தில், தமிழர் பகுதிகளில் செயற்பட்ட அரசியல் கட்சிகள் அனைத்துமே, தேர்தல் காலங்களில் மாத்திரமே மக்களை நோக்கிச் செல்லும் நிலை ஒன்று பெரும்பாலும் அவதானிக்கப்பட்டது.

அரசியல் என்பது தேர்தலுக்காக வாக்களிக்கும்படி மக்களை கேட்டுச் செல்வது மட்டுமல்ல.

அதிகாரத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மக்களுடனான தொடர்பறாத வகையில் பிணைந்து நின்று செயற்படுவதே அரசியல்.

ஆனால் அத்தகைய பிணைப்பு, அரசியல் களத்துக்குள் இன்னமும் தமிழ்த் தேசிய அரசியல் பிரவேசிக்கவேயில்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மூன்று தசாப்த இடைவெளிக்குப் பிந்திய தமிழர் அரசியல், மக்களையும் அரசியல் கட்சிகளையும் ஒரு அன்னியோன்னிய நிலைக்கு கொண்டு வரத் தவறியிருக்கிறது.

இதனால் அரசியல்கட்சிகள், அவற்றின் கொள்கைகள், போராட்டங்கள், பேரணிகளின் மீது மக்களை ஈர்க்க முடியாத நிலை காணப்படுகிறது.

தேர்தல் காலங்களில் எப்படியோ மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கொண்டு வரப்பட்டனர்.

ஆனால், அவ்வாறு பேரணிகளுக்கு சென்றவர்கள் அனைவரும் அவருக்கு ஆதரவாக வாக்களித்திருக்கவில்லை.

தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாக அவர்கள் வலுவாக நின்றதை வடக்கு மாகாணசபைத் தேர்தல் தெளிவாக எடுத்துக் காட்டியது.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ வின் காலத்தில் நடத்தப்பட்டது போன்ற, ஒரு தேர்தல் பேரணியை [illegible] எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியாலும் இன்றுவரை ஒழுங்கு செய்ய முடியவில்லை.

அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின்னர் கூட அது சாத்தியப்படும் போலத் தெரியவில்லை.

அரசியல் பேரணிகளுக்காகவோ போராட்டங்களுக்காகவோ இப்போது தமிழ் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரத் தயாராக இல்லை என்பதை கடந்த ஐந்து ஆண்டு கால அரசியல் போக்கு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

இலங்கையின் மற்றப் பகுதிகளில் இப்படியான நிலை இல்லை.

தமிழர் பகுதிகளில் மாத்திரம்– அரசியலுடன் ஒட்டாத ஒரு போக்கு இருக்கிறது. ஜனநாயக அரசியல் மீதான அவர்களின் வெறுப்புணர்வை வெளிப்படுத்துவதாகவும் இதனைக் கருதலாம்.

அல்லது, ஜனநாயக அரசியலில் ஈடுபடும் தரப்பினர் மீதான நம்பிக்கையீனமாகவும் அதனைக் கொள்ளலாம்.

எதுஎவ்வாறாயினும், தமிழரின் அரசியலுக்குள் புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டிய அவசியம் வலுவாக உணரப்படுகிறது.

தமிழ்த் தேசிய சக்திகள் பிரிந்து நின்று மோதிய இந்தத் தேர்தல் களத்தில் பல உண்மைகள், பலராலும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், எதிர்காலத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால், இளையவர்களை அதிகளவில் உள்வாங்க வேண்டும், அகமுரண்பாடுகளைத் தவிர்த்து கூட்டுப் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும், தாயகத்திலும், புலத்திலும் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புகளை மதித்து நடக்க வேண்டும் என்பது போன்ற பல விடயங்களில் தனது எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட வேண்டிய நிலையில் இருக்கிறது.

அவசரமான மாற்றங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லாது போனால் ஆபத்தான நிலை ஒன்றுக்குள் தள்ளிச் செல்லப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்ற அபாயச் சங்கொலியை இந்த தேர்தல் பரப்புரைகள் எதிர்வு கூறி யிருக்கின்றன.

ஒருவேளை, கூட்டமைப்புக்கு இந்த தேர்தலில் மக்களின் முழுமையான ஆதரவு கிடைத்தால், அதனைச் சாக்காக வைத்துக் கொண்டு அவசரமான மறுசீரமைப்புக்குச் செல்ல மறுத்தால், இன்னொரு தேர்தலில் கடுமையான பாடங்களை கற்க வேண்டி வரலாம்.

இந்தத் தேர்தலில் கூட சில பாடங்களை கூட்டமைப்பு கற்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்து அரசியல் செய்வதையே, அதனை சிதைப்பதையே ஒரே குறிக்கோளாக கொண்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, கொள்கை ரீதியாக எவ்வாறு தனது இலட்சியத்தை முன்னெடுக்கவுள்ளது என்பதை மக்களிடம் சரியாக நிறுவத் தவறியுள்ளது.

இந்த தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்பட்டால், அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் தான் ஏற்படும்.

ஆனால், அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைக்கு, அதன் செயற்பாட்டுக்கு கிடைத்த ஆதரவாக கருதமுடியாது.

உள்ளூர் அரசியல் களத்துக்கு வெளியில் இருந்து திடீரெனப் பிரயோகிக்கப்பட்ட பிரசார அழுத்தங்கள் கூட்டமைப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான அதிருப்தியை பரவச் செய்வதன் ஊடாக மட்டும், நிலையான அரசியல் தளம் ஒன்றை உருவாக்க முடியாது.

இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் எல்லாமே, சரியானவை என்று அர்த்தமாகி விடாது.

தரம் தாழ்ந்த விமர்சனங்களும், அரசியல் நாகரிகமற்ற பரப்புரைகளும், வாக்காளர்களைக் குழப்புவதில் கணிசமான பங்காற்றியிருக்கின்றன.

ஆனால் இது தமிழரின் ஆரோக்கியமான அரசியல் எதிர்காலத்துக்கு உகந்த ஒன்றல்ல.

இதேவிதமான குற்றச்சாட்டுகளும், வசைமாரிகளும், இன்னொரு தேர்தலில் இடம்மாறக் கூடும் என்பதையும் மறந்து விடலாகாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தெளிவான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்.

அவர்களுக்கு மூன்றாம் தர அரசியல் விமர்சனங்களோ, பரப்புரைகளோ தேவையற்றது.

கொள்கை ரீதியாக– நடைமுறைச் சாத்தியமான அரசியல் திட்டங்களின் ஊடாக, எதிர்கால அரசியல் போக்கை திட்டமிடத் தவறினால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பாதகமான நிலையை எதிர்கொள்ள நேரிடும்.

இன்னொரு பக்கத்தில் புதிதாக அரசியல் களத்துக்கு வந்திருக்கும் ஜனநாயகப் போராளிகள், தாம் அரசியலுக்கு வந்துள்ள நோக்கத்தையும் பின்புலத்தையும், மக்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம்.

அதாவது, எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகப் பயணிப்பதாயின், அதற்கான வேலைத் திட்டங்களை இடையறாமல், செய்ய முனைய வேண்டும்.

தேர்தல் காலத்தில் மட்டும் ஆசனம் கேட்டு நிற்பது போன்ற செயல்களின் மூலம், தம்மைக் கீழ் இறக்கிக் கொள்ளாமல், தமிழ்த் தேசிய அரசியலை தனித்துவமாக முன்னெடுப்பதாயின் அதற்குரிய ஆக்க பூர்வமான வழிமுறைகளைத் தேட வேண்டும்.

இவை, தமிழ்த் தேசிய கட்சிகள் தேர்தலுக்குப் பின்னர் கையாள வேண்டிய வழிமுறைகளாக இருக்கும்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெறும் இலக்குடன் எல்லோரும் போட்டியிடவில்லை. பெரும்பாலானவர்கள், சிலரைத் தோற்கடிக்கவே களமிறங்கியுள்ளனர், களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியத்தின் பெயரால் நடத்தப்படும் அரசியலில், தூய்மையும் நேர்மையும் மட்டுமன்றி, ஒற்றுமையும் அவசியம்.

ஒற்றுமை எந்தக் கட்டத்தில் குலைந்து போகிறதோ, அல்லது சிதைந்து போகிறதோ, அப்போதே தமிழ்த் தேசியத்தின் ஆணிவேரும் அசைக்கப்பட்டு விடும்.

தமிழ்த் தேசியத்தை சிதைக்க முயன்றவர்களே, இன்று அதனைக் கையில் எடுத்துள்ளதை கொண்டு, இது எந்தளவுக்கு ஆபத்தான நிலை என்ற உண்மை, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குப் புரிந்தால் சரி.

*நன்றி புதினப் பலகை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாட்டின் தலைவிதி

மு.ஈழத்தமிழ்மணி

இலங்கை அரசியலில் ஆயுட்காலம் வரையில் ஜனாதிபதியாக விருந்து ஆட்சியைத் தொடரமுடியுமென அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்றுப் போனதற்கு, மைத்திரிபால சிறிசேனவின் செல்வாக்குத் தான் காரணம் என்பதைவிட மக்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியும், வெறுப்புமே காரணமாக இருந்துள்ளன.


ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிக்குப் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவால் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க முடியவில்லை. மஹிந்த தோற்றபின் அவருடைய குடும்பம் மற்றும் கையாட்களுக்கு எதிராக இன்று ஊழல் மோசடிகள், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சங்கிலித் தொடர்போல் இன்றைய அரசால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மஹிந்தவோ அவர் சார்ந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்களோ இதனைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

மஹிந்த ராஜபக்ஷவும் அவரது விசுவாசிகளும் முன்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டு வந்தனர். ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப்போன மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவந்து நிறுத்துவதற்கு அவருக்கு விசுவாசமானவர்களும், ராஜபக்ஷவின் தோல்வியால் தமது அரசியல் எதிர்காலம் சூனியமாகி விடும் என்று எதிர்பார்க்கின்றவர்களும் அவரின் கையாள்களும், ராஜபக்ஷ ஆட்சியில் பெரும் இலாபமடைந்த இலங்கையிலுள்ள பெரும் வர்த்தகப் பிரமுகர்களும் ஒன்று சேர்ந்து நுகேகொடவில் மஹிந்தவை அரசியலுக்கு கொண்டு வருவதற்கான கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

பெப்ரவரி மாதம் மஹிந்தவை மீண்டும் சிங்கள மக்கள் மத்தியில் ஹீரோவாக்குவதற்கே நுகேகொடக் கூட்டத்தை நடத்தியிருந்தனர். மஹிந்தவின் ஆட்சியில் நடைபெற்ற அதிகார துஷ்பிரயோகம், ஊழல் மோசடிகள், நிதி மோசடிகள் தொடர்பாகக் குற்றங்கள் சாட்டப்பட்ட நிலையில் மஹிந்த ராஜபக்ஷவே பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராகவே போட்டியிட வேண்டும் என்ற கோஷங்கள் பலமாக முன்வைக்கப்பட்டிருந்தன. மஹிந்தவின் காலம் முடிந்துவிட்டது. அவருக்கு இன்னமும் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. ராஜபக் ஷவை பிரதம வேட்பாளராக கொண்டுவர வேண்டிய தேவையில்லை என்ற அபிப்பிராயங்களும் எழாமலில்லை.

ஜனாதிபதியைச் சந்தித்த மஹிந்த ராஜபக்ஷ தன்னை பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் பிரதமர் வேட்பாளராக அறிவிக்குமாறு கேட்டிருந்தார். ஜனாதிபதி உடன் மறுத்துவிட்டார். ஜனாதிபதி மறுத்த நிலையிலும் பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டே தீருவேன் என்ற இறுமாப்புக்கொண்ட நிலையில் மஹிந்தவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பு மனு வழங்கியிருந்தது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மஹிந்தவை பிரதம வேட்பாளராக்கினாலே முடியும் என்று கருதியவர்களின் பலம் சுதந்திரக் கட்சியில் மேலோங்கியிருந்தது. மஹிந்த அரசில் பல்வேறு பயங்கரமான குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகியுள்ள பெரும் எண்ணிக்கையான சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும், மஹிந்த அணியில் பதவி வகித்த முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்களும் மஹிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் தான் தாம் தப்பிப் பிழைக்கலாம் என்றுணர்ந்து கொண்டதால் மஹிந்தவுக்கு ஆதரவை முழுமையாக வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட



> ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட மஹிந்த, தானே பிரதமராகவும் வருவேன் இதிலில் எந்த மாற்றமுமில்லை என்பது போலவே பரப்புரைகளில் ஈடுபட்டார். எவரைப் பிரதமராக நியமிப்பது என்பதை ஜனாதிபதி மைத்திரியே முடிவெடுப்பார். முன்கூட்டியே பிரதமர் யார் என்று அறிவிக்கின்ற வழக்கம் கட்சியில் இல்லை, ஜனாதிபதி தான் பிரதமரை நியமனம் செய்வார் இதுதான் வழமை. யாப்பும் அதனையே குறிக்கின்றது.

## இனியாவது மாற்றப்படுமா?

மஹிந்த, தானே பிரதமராகவும் வருவேன் இதில் எந்த மாற்றமுமில்லை என்பது போலவே பரப்புரைகளில் ஈடுபட்டார்.

எவரைப் பிரதமராக நியமிப்பது என்பதை ஜனாதிபதி மைத்திரியே முடிவெடுப்பார். முன்கூட்டியே பிரதமர் யார் என்று அறிவிக்கின்ற வழக்கம் கட்சியில் இல்லை, ஜனாதிபதிதான் பிரதமரை நியமனம் செய்வார் இதுதான் வழமை. யாப்பும் அதனையே குறிக்கின்றது.

தானே பிரதமர் என்றவாறு தனது தேர்தல் பரப்புரைகளை அமைத்துக்கொண்டு தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் சுப்பர் ஹீரோவாக மீண்டும் அவதரித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ அரச அதிகாரத்தை அவசரமாகக் கைப்பற்றுவதற்காக மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான வழிவகைகளை தேடிக்கொண்டிருக்கிறார். மஹிந்த அநுராதபுரத்தில் முதலாவது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்திருந்தார். சிங்கள சமூகத்தின் அடித் தட்டு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்க செய்கின்ற முயற்சியில் இவர்கள் ஈடுபட்டனர். மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக வெட்கமற்ற விதத்தில் இனத் துவேசத்தை மஹிந்தவும் அவரது அணி வேட்பாளர்களும் பயன்படுத்தினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சமஷ்டிக் கொள்கை மஹிந்தவுக்கு முக்கியமான பரப்புரைக்குரிய தொனிப்பொருளாக அமைந்திருந்தது. தமிழரசுக்கட்சி சமஷ்டிக் கொள்கையே முக்கியமாகக் கொண்டிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டது. 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திம்புக்கோட்பாட்டு அடிப்படையில் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈரோஸ் அமைப்பும் போட்டியிட்டன. இந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டே, இரண்டு கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். அந்தக் காலகட்டத்தில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மஹிந்தவும், ரணில் விக்கிரமசிங்கவும் பதவி வகித்தனர். அன்று சமஷ்டியை ஏற்பதுபோல் அமைதியாக இருந்தவர்கள் இன்று சமஷ்டியை வைத்து சிங்கள மக்கள் மத்தியில் இனவாதக் கண்ணோட்டத்தோடு பரப்புரை செய்து வருவதும் கண்டன அறிக்கைகளை வெளியிடுவதும் அவர்களது பௌத்த சிங்கள மேலாதிக்கப் போக்கையே காட்டுகின்றது.

தேர்தல் பரப்புரைகளின்போது மஹிந்த ராஜபக்ஷ வடக்கு, கிழக்கு இணைந்தே புதிய நாடு உருவாகும் என்றும் வரைபடத்தில் வடக்கு, கிழக்கு இல்லாத இலங்கையையே நாட்டு மக்கள் பார்க்க முடியும் எனவும் 60 மாதங்களில் புதிய நாடென்பது வடக்கு கிழக்கு இணைந்த தமிழீழமே என்றும் கதைவிட்டார்.

சுமார் 47 ஆண்டுகளாக நயினாதீவு நாக விகாராதிபதியாக இருக்கும் வண.நவந்தகல பதும கீர்த்தி தேரர் மஹிந்தவுடன் கைகோர்த்த நிலையில் யாழ்ப்பாணத்தின் நிலைமை பயங்கரமாக உள்ளதெனக் கூறினார். யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களை எல்லாம் அகற்றுவதாக விஜயகலா மகேஸ்வரன் கூறுகின்றார். அதுமட்டுமன்றி கொழும்பு உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலிருந்து நயினாதீவுக்கு வருகின்ற யர்த்திரிகள் தாக்கப்படுவதாகவும், வாகனங்கள் சேதமாக்கப்படுகின்றதாகவும் தாம் அச்சத்துடனேயே வாழ்கின்றதாகவும் இனவாதத்தைக் கொட்டித் தீர்த்திருக்கின்றார்.

மஹிந்த ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாதம் என்ற ஆயுதத்தை இறுகப் பிடிக்கின்றார். மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை தன்னை சிங்கள மக்கள் தோற்கடிக்கவில்லை என்றும் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் வாக்குகளே தான் தோல்வியடைவதற்கு காரணமாயிருந்தன என்றும் கூறி தமிழ் பேசும் மக்கள் மீது பழியைப் போடுகின்றார். மஹிந்தவின் தோல்விக்கு சிங்கள மக்களும் தான் காரணம் என்பது மஹிந்தவுக்குப் புரியவில்லையா?

மஹிந்தவுக்காக வீதியில் இறங்கிப் பரப்புரை செய்த அரசியல்வாதிகளும், வேட்பாளர்களும், பௌத்த தேரர்களும் சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக சிங்கள மக்களை மீண்டும் தூண்டிவிடத்தக்க வகையிலான நச்சுத்தனமான கருத்துக்களையே முன்வைத்தார்கள். மஹிந்தவை பிரத மராக்க வேண்டும் என்ற வெறியினால் வெளிநாட்டு சதியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும், நாடு பிரிந்துவிடும், சமஷ்டிக்கோரிக்கை என்பது தமிழீழமே என்ற கோஷங்களை அவரது ஆதரவாளர் கள் எழுப்பி வந்தனர்.

நாட்டுமக்கள் முன்னிலையில் எந்தவிதமான அரசியல் திட்டத்தையும் மஹிந்த முன்வைக்கின்றார் இல்லை. அவரிடம் அடிப்படையில் சிறுபான்மை இனத்தவர்கள் மீதான பகைமை மற்றும் வெறுப்பு உணர்வைக் கொண்ட அரசியலைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள மக்கள் அளித்திருந்த 58 லட்சம் வாக்குகளும் இனவாதத்தின் பக்கம் போய்ச்சேருமா? பொதுத்தேர்தலில் மஹிந்தவும் அவரது கொள்கை சார்ந்த வேட்பாளர்களும் இனவாதக்கொள்கையை இறுகப்பற்றிப் பிடித்திருக்கும் இந்தவேளையில் 58 லட்சம் வாக்குகள் தங்களது வெற்றியைத் தீர்மானிக்கும் என்பது வீண்விவாதமாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சி அப்படியொரு நம்பிக்கையுடன்தான் பொதுத்தேர்தலில் போட்டியிட்டதா?

ஆரோக்கியமான அரசு இலங்கையில் மலருமா? ஒருவேளை இனவாதிகள் மஹிந்தவைப் பிரதமராகத் தெரிவு செய்து ஆட்சியமைத்தால் சிறுபான்மை மக்களின் நிலைமை மோசமாகவே மாறிவிடும்.

இன்றைய தினம் இந்த நாட்டின் தலைவிதி எழுதப்பட்டு விடும். இதில் தமிழர்களின் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? அல்லது தொடருமா என்பதுதான் இன்றைய முக்கிய விளைவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிர்க்கக் கூடாத உணவுகள்

காற்று மற்றும் நீர் மூலம் பரவும் நோய்த் தொற்று ஏற்படுவதை சுத்தமான மனிதர்களால் கூடத் தடுக்க முடியாது. நாம் சாப்பிடும் முக்கியமான உணவு வகைகள் எமது உடலில் சேரும் இத்தகைய நோய்க் கிருமிகளை எளிதில் தடுத்து அழித்து விடும். நோய் பரவுவதைத் தடுக்கும் அந்த உணவுகள் பின்வருமாறு:

♦வெள்ளைப் பூண்டு:
குடலில் உள்ள புழுக்களிலிருந்து மற்றும் தலைவலி முதல் புற்றுநோய் வரை பல நோய்களையும் குண மாக்க வெள்ளைப் பூண்டு பயன்படுத்தப்படுகிறது.

♦ வெங்காயம்: வெள்ளைப் பூண்டுடன் சேர்ந்து வல்லமை மிக்க புகழ் மிக்க மருந்தாக வெங்காயம் செயற்பட்டு வருகிறது. தடிமனை ஏற்படுத்தும் நச்சு நுண்மங்களையும், புற்று நோய்களையும், இதய நோய்களையும் தடுத்து நிறுத்துகிறது. நோய்த் தொற்றைத் தடுத்து உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.

♦ கரட்: நோய் எதிர்ப்புச் சக்தி வேலிகள் நன்கு உறுதிப்பட கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் உதவுகிறது. குறிப்பாக எமது உடல் தோலிலும், சளிச் சவ்விலும் நோய் எதிர்ப்புப் பொருள்கள் நன்கு செயற்படும்படி தூண்டிக்கொண்டே இருப்பது கரட் தான்.

♦ஒரேஞ்: காற்று மற்றும் நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றுக் கிருமிகளை எதிர்த்துப் போராடி உடலில் அவை சேராமல் அழிக்கின்றன. ஒரேஞ் கிடைக்காதபோது எலுமிச்சம் பழச் சாறு அருந்தலாம்.

♦பருப்பு வகைகள்: பாதாம் பருப்பு, வேர்க்கடலை போன்றவை உள்ள விற்றமின்– ஈ வெள்ளை இரத்த அணுக்கள் சிறப்பாகச் செயற்படத் தூண்டி விடுகின்றன. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது.

♦கோதுமை ரொட்டி: நரம்பு மண்டலமும், மூளையும் நன்கு செயற்படவும் புதிய செல்கள் உற்பத்தியாவதற்கு உதவும் மண்ணீரலும். நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.

♦இறால், மீன் மற்றும் நண்டு: அழிந்து போன செல்களால் நோயும், நோய்த் தொற்றும் ஏற்படாமல் தடுப்பதில் இவற்றில் உள்ள துத்தநாக உப்பு உதவுகிறது. எனவே வாரம் ஒருநாள் இவற்றில் ஒன்றைச் சேர்த்துச் சாப்பிட்டுவரவும்.

♦ தேநீர்: தேநீரில் உள்ள மக்னீசியம் உப்பு நோய் எதிர்ப்புச் செல்கள் அழிந்து விடாமல் பாதுகாக்கிறது. சூடான தேநீர் ஒரு கப் அருந்துவதால் நோய்த் தொற்றைத் தடுத்து விடலாம்.

♦பாலாடைக்கட்டி: சீஸ் உட்பட பால் சம்பந்தப்பட்ட பொருள்களில் உள்ள கல்சியம், மக்னீசியம் உப்புடன் சேர்ந்து கொண்டு, உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை அமைப்பு கருதி தவறாமல் ஆற்றலுடன் செயற்பட உதவுகிறது.

♦ கோவா: குடல் புண்கள் ஆறு மடங்கு வேகத்தில் குணம் பெற கோவாவில் உள்ள குளுட்டோமைன் என்ற அமிலம் உதவுகிறது. உணவின் மூலம் உள்ளே சென்றுள்ள நோய்த்தொற்று நுண்மங்கள், கோவாவால் உடனே அகற்றப்படுகின்றன. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது.

மேற்கண்ட உணவுப் பொருள்களில் ஏழு உணவுப் பொருள்களாவது தினமும் எமது உணவில் இடம் பெற வேண்டும். இதைச் செய்து வந்தால் எமது மருந்துவச் செலவு குறைந்து விடும்.

## தெய்வீகத் தன்மை

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்துக்கும் மேலாக, அன்பு வேண்டும்.

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி, உள்ளே குடி கொண்டுள்ள அந்தத் தெய்வீகத் தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியம்.

தைரியமும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் பலரின் நன்மைக்காக, பலரின் சுகத்துக்காக தங்களைத் தியாகம் செய்துதான் ஆகவேண்டும்.

பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 700 | 500 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 150 | 400 |
| கணவாய் | 650 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 600 | 700 | 600 | 450 | 500 | 400 |
| சுறா | 600 | 600 | 500 | 600 | 600 | – |
| சீலா | 250 | 500 | 400 | 450 | 450 | 350 |
| விளை | 600 | 450 | 450 | 500 | 450 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 150 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 500 | 800 | 700 | 500 | 400 | – |
| ஓரா | 400 | 350 | 300 | 450 | 300 | – |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | – |
| நகரை | 200 | 300 | 300 | 300 | 100 | 300 |
| ஆடை. | 150 | 200 | 130 | 120 | 150 | 70 |
| ஒட்டி | 200 | 250 | 300 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 200 | 130 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | – | 300 |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 150 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 280 | 300 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 | 35 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 50 | 60 | 80 | 40 |
| கரட் | 140 | 140 | 100 | 100 | 180 | 160 | 140 | 160 |
| மரவள்ளி | 70 | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 60 | 100 | 60 | 40 | 140 | 100 |
| பாகல் | 160 | 140 | 100 | 140 | 100 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 120 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 50 | 40 | 40 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 200 | 100 | 80 | 120 | 120 | 100 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 30 | 30 | 80 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 200 | 250 | 140 | 220 | 400 | 120 | 150 |
| புடோல் | 50 | 40 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 | 70 |
| வெண்டி | 60 | 40 | 50 | 80 | 70 | 80 | 80 | 25 |
| போஞ்சி | 160 | 150 | 180 | 160 | 140 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 80 | 80 | 80 | 120 | 80 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 80 | 80 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 50 | 60 | 60 | 150 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 160 | 140 | 120 | 140 | 180 | 160 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | 140 | 200 | 160 | 140 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 | 90 | 120 | 100 |

## நாளை

**ஆவணி-02**
**புதன்கிழமை**
**19.08.2015**

திதி: பஞ்சமி முழுவதும்
நட்சத்திரம்: அத்தம் பி.ப. 12.25 வரை
சுபநேரம்: 04.35–06.05 வரை
இராகுகாலம்: 12.05–01.35 வரை
நல்லூர் கந்தசுவாமி கொடியேற்றம்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | | 9 | | |
| | | 4 | | | | | | 6 |
| | 5 | 6 | 2 | 4 | | | | 1 |
| 7 | | | 1 | | | | 3 | |
| 3 | 1 | | | | | | | 2 |
| 6 | 2 | | | | 3 | | 1 | 8 |
| 8 | 6 | | | 1 | 5 | 2 | 9 | |
| 5 | | | | | | 1 | 6 | |
| | | | | 6 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 5 | 1 | 8 | 6 | 9 |
| 6 | 5 | 3 | 9 | 8 | 7 | 2 | 1 | 4 |
| 1 | 8 | 9 | 2 | 6 | 4 | 3 | 5 | 7 |
| 4 | 9 | 5 | 8 | 1 | 6 | 7 | 3 | 2 |
| 8 | 7 | 6 | 4 | 2 | 3 | 5 | 9 | 1 |
| 3 | 2 | 1 | 7 | 9 | 5 | 4 | 8 | 6 |
| 7 | 6 | 8 | 1 | 3 | 2 | 9 | 4 | 5 |
| 9 | 1 | 4 | 5 | 7 | 8 | 6 | 2 | 3 |
| 5 | 3 | 2 | 6 | 4 | 9 | 1 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வ்ராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகை அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
பொன் செல்வராசா வாக்களிக்கச் சென்றபோது....



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சீ.யோகேஸ்வரன்
வாக்களிக்கச் சென்றபோது....



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்
வீரவன்ஸ வாக்களிக்கச் சென்றபோது...



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் எம்.எல்.ஏ.எம்.
ஹிஸ்புல்லாஹ் வாக்களிக்கச் சென்றபோது...



தென் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் [illegible]
ரணதுங்க மனைவியுடன் வாக்களிக்கச் சென்றபோது...



[illegible] மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் வாக்களித்தபின்
ஆதரவாளர்களுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்களித்த போது...



முன்னாள் ஜனாதிபதியும் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ வாக்களிக்கும்போது...



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் சுசில் பிரேமஜெயந்த வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றபோது...



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ வாக்களிப்பின் பின் மனைவி மற்றும் ஆதரவாளருடன்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மனைவியுடன் வாக்களிக்கச் சென்றபோது...



ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வாக்களிக்கச் சென்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடிப் பொலிஸார் நேற்று திடீர் சுற்றிவளைப்பு

## வாக்காளர்களுக்கு பொருள்கள் வழங்குவதாகக் கிடைத்த தகவலையடுத்து

நெல்லியடி, ஓக.18
வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வாக்காளர்களுக்கு பொருள்கள் வழங்குவதற்கு பதிவு மேற்கொள்வதாகக் கிடைத்த தகவலை அடுத்து நேற்றுப் பொலிஸார் திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.
அதில் ஓட்டோ ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் சந்தேக நபர்கள் ஓட்டோவை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஒருவரது ஆதரவாளர்களே தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்காளர்களுக்கு பொருள்கள் வழங்க பதிவுகளை மேற்கொள்வதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.
சுற்றிவளைப்பின்போது தப்பிச் சென்ற சந்தேகநபர்களைத் தேடும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந–109)



## தெற்கில்

காலித் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சி 33 ஆயிரத்து 798 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளது. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 19 ஆயிரத்து 613 வாக்குகளையே இம்முறை பெற்றுள்ளது. அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி கடந்த முறையை விட ஓரளவு வாக்கு வங்கியை அதிகரித்துள்ளது.
இதேவேளை, தபால் மூல வாக்களிப்பு முடிவுகளின் பிரகாரம் காலி, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னிலை பெற்றது. திருகோணமலை மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னிலை பெற்றது. (த)

## வடக்கு

வீதத்தில் மிகச் சொற்பளவு வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.
இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது. காலை 7 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையில் வடக்கில் வாக்களிப்பு சுமுகமான முறையில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் காலை 7 மணியிலிருந்து 11 மணி வரையில் அதிகள விலானோர் வாக்களித்திருந்தனர். பின்னர் மந்தமாக வாக்களிப்பு இடம்பெற்றது. மாலை வேளையில் மழை பெய்தமையினால், ஒரு சில பகுதிகளில் வாக்களிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இருப்பினும், மாலை 3.15 மணியின் பின்னர் மீளவும் வாக்களிப்பில் அதிகரிப்பு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேபோன்றே வன்னித் தேர்தல் மாவட்டத்தின் மூன்று மாவட்டங்களினதும் நிலைமைகள் காணப்பட்டதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 சதவீதமும், கிளிநொச்சி மாவட்டத்தில் 70.9 சதவீதமுமாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 65.45 சதவீதமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 71 சதவீதமும், மன்னார் மாவட்டத்தில் 75.6 சதவீதமும், வவுனியா மாவட்டத்தில் 68 சதவீதமுமாக 71.53 சதவீத வாக்குப் பதிவாகியுள்ளது. (த–5)

## புதிய

பிரமாணம் செய்துகொள்ள வேண்டிய கட்டாயத்தின் அடிப்படையில், புதிய பிரதமரும் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி அல்லது அதற்குப் பிந்திய தினமொன்றிலேயே சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளும் வாய்ப்புள்ளதாகத் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. (த)

## சு.க. மத்திய

தேர்தலில் போட்டியிட்டதன் காரணமாக நீக்கப்பட்டுள்ளனர்.
இது குறித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிப்பு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
எது எவ்வாறாயினும் மத்திய செயற்குழுவைக் கூட்டாமல் இவ்வாறு உறுப்புரிமையை நீக்குவது சட்ட ரீதியானது அல்ல என பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த)

## கிழக்கிலும்

புக்கு 3 ஆசனங்களும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு ஆசனமும், திருகோணமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களும் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் மூலம் தெரியவந்தது. (த)

## தேர்தல்

திணைக்களத்துக்கு இதுவரையில் 226 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறிய அவர், சிறிய குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சுமார் 50 பேராவது நேற்று இரவு சிறைச்சாலை உணவை உண்பார்கள் என எதிர்பார்ப்ப தாகக் கூறினார்.
தேர்தல்கள் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற, ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–
இம்முறை தேர்தல் மிக அமைதியாகமுறையில் இடம்பெற்றது. கடந்த தேர்தல்களில் ஒரு மணி நேரத்தில் கிடைத்த முறைப்பாடுகளை விட இம்முறை கிடைத்த முறைப்பாடுகள் குறைவானவை. இம்முறை 236 முறைப்பாடுகளே எமக்கு கிடைத்தன. அதிலும் பாரதூரமான வன்முறைகள் எவையும் இடம்பெறவில்லை. தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியாகும் போதும் வன்முறைகள், வாக்குவாதங்கள் இடம்பெறாது என எதிர்பார்க்கிறோம். தேர்தலில் வென்றோருக்கு இருக்கும் அத்தனை உரிமைகளும் தோற்றோருக்கும் உண்டு. எனவே அமைதியைத் தொடந்தும் கடைப் பிடிக்க வேண்டும்–என்றார். (த–109)

## வன்முறைகளின்றி

வாக்குப்பெட்டிகள், நாடெங்கும் அமைக்கப்பட்டுள்ள 1,600 வாக்கு எண்ணும் நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டன.
ஒருசில மாவட்டங்களில் காலை வேளையில் வாக்களிப்பு விறுவிறுப்பாக நடைபெற்றது. மேலும் சில மாவட்டங்களில் மதியத்துக்குப் பின்னர் வாக்களிப்பு வேகம் அதிகரித்தது.
நாடளாவிய ரீதியில் சராசரியாக 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

## வடக்கில்

வாய்ப்புக்கள் உள்ளதாக அதிகாலை கிடைத்த தகவல்கள் மூலம் அறிய முடிந்தது.
உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப்படாத நிலையிலும் அதிகாலைத் தகவல்களின் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துத் தொகுதிகளிலும் முன்னிலையில் இருந்தது. அடுத்த இடத்தில் ஈ.பி.டி.பியும், தொடர்ந்து வரும் இடங்களில் ஐக்கிய தேசி யக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகி யனவும் உள்ளதாக அறியக் கிடைத்தது.

## இலங்கையின்

வரை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் வர லாற்றில் நேற்று இடம்பெற்ற தேர்தல் அமைதி யான முறையில் இடம் பெற்றது.
ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல் மற்றும் அதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களை இன்றைய தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தெளிவான வித்தியாசம் காணப்படும்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை.
அதேபோல் தேர்தலில் வெற்றி பெறும் தரப்பினர் தமது வெற்றி யைக் கொண்டாடும்போது தோல் வியடைந்த தரப்பினருக்குப் பாதிப் புக்கள் இடம்பெறாத வகையில் வெற்றியைக் கொண்டாடவேண் டும். அத்துடன் இந்த தேர் தலை மிகவும் சுமுகமான முறையிலும் அமைதியான முறை யிலும் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் நன்றிகள் – என்றார். (த)

## ஜனநாயக

தெரிவித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இந்தத் தேர்தலில் தமது கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று வெற்றிபெற்று புதிய நாடு ஒன்று உருவாக்கப்படுமெனத் தெரிவித்த ரணில், கடந்த ஜனவரி 8ஆம் திகதி கிடைத்த மக்கள் ஆணையை ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என வும் தெரிவித்தார்.
அத்துடன், தேர்தலின்போது சட்டங்களை மீறி செயற்படுவோர் மீது கட்சி பேதமின்றி, நடவடிக்கை எடுக்கப்படும் என்வும் அவர் தெரிவித்தார்.
குறிப்பாக நீதியான தேர்தலை நடத்த பெரும் உதவியளித்த தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலி ஸார், அரச ஊழியர்கள் அனைவருக்கும் பிரதமர் தமது நன்றி யையும் தெரிவித்தார். (த)

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம்
விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்
எமது பணிப்பாளர் சபை தீர்மானத்துக்கமைய மேற்படி கூட்டம் 30.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் இ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். இந்த கூட்டத்துக்கான நிகழ்ச்சிநிரல் சங்க பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.
ஆ.சுதன் செயலாளர்,
தொடர்பு: 0772380196
(62331) (10.6)
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.
17.08.2015

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம் 08.10.1939 மறைவு 01.08.2003
அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை
(பங்குதாரர்
நியூ சோபிதா நகைமாடம்)
(திதி : 18.08.2015)

அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பன்னிரண்டு
ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன்
இறைவனை வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்.
"திருவேரகம்"
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
நியூ சோபிதா நகைமாடம்,
74/1,(184), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

நல்லூர் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
Mega Sale
19.08.2015 தொடக்கம்
MaLrow Yaarl காட்சியறையில்
என்றும் எங்கும் கிடைக்காத விலைக்கழிவில்
10% → 50%
வியாபார நேரம்
8 a.m - 10 p.m.
தெரிவுகளுக்கு முந்துங்கள்
Steel Cupboard
6x3 12,500/= 8,900/=
6x4 14,500/= 9,900/=
6x5 19,000/= 14,900/=
விலைக்கழிவு கையிருப்பு உள்ளவரை மட்டுமே
இன்னும் பலவகையான பொருள்களும், ஓடர்களும் விசேட விலைக் குறைப்பு
விநியோகஸ்தர்கள் (Distributors) தேவை
யாழ்ப்பாணத்தில் யப்பான், கொரியா, சவுத் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட தொழிலாளர்களால் மல்றோ தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் வீடு, அலுவலகத்துக்குரிய Steel, MDF, Melamaine, Timber சகலவிதமான தளபாடங்களையும் விற்பனை செய்ய விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.
தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி, சுன்னாகம், மானிப்பாய், வேலணை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனியா.
MALROW YAARL SHOW ROOM
Office: 0212231666, 0777286069

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கா சரியான தருணத்தில் விடைபெறுகிறார் சங்காவின் மனைவி யெஹாலி பெருமிதம்

சர்வதேச ஆட்டங்களில் இருந்து சங்கக்காரா ஓய்வுபெற இதுவே சரியான தருணம் என்று அவரது மனைவி யெஹாலி கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்காரா, இந்தியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவரை சிறப்பாக வழியனுப்ப இலங்கை கிரிக்கெட் வாரியம் அதற்கான ஏற் பாடுகளை வேகமாக செய்து வருகிறது.

இந்த நிலையில் சங்கக்காரா ஓய்வு பற்றி அவரது மனைவி யெஹாலி கருத்து தெரிவித்ததாவது கண்டிப்பாக இந்த நிகழ்வு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று. அவர் இலங்கை அணிக்காக 15 வருடம் விளையாடி இருக்கிறார். இந்த நிகழ்வுக்காக அனைவரும் சிறப்பாக தயாராகி



வருகிறோம். இதுவே அவர் ஓய்வு பெற சரியான தருணமாக இருக்கும். அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறார். எல்லா வீரர்களுக்கும் ஒரு நாள் விடைபெறும் தருணம் வரும். அது போன்ற நாள் தான் சங்கக்காராவுக்கும் வந்திருக்கிறது. சரியான இடத்தில், சரியான தருணத்தில் அவர் ஓய்வுபெற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. கண்டிப்பாக இந்த நிகழ்வு மிகவும் உணர்ச்சிகரமான ஒன்றாக இருக்கப் போகிறது. நாங்கள் தயாராகி வருகிறோம். எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் கிடைக்காத ஒன்று சங்கக்காராவுக்கு கிடைத்திருக்கிறது. அவர் கிரிக்கெட்டில் நல்ல நிலையில் இருக்கும் போதே ஓய்வு பெறுகிறார். சங்கக்காராவின் கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் ஜெயவர்த்தனே கலந்துகொள்வார் என்றார். (ம)



# மதுவில் குளித்த இங்கிலாந்து வீரர்கள்

ஆஷஸ் தொடரின் நான்காவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இங்கிலாந்து. இந்த வெற்றிக்குப் பின்னர் இங்கிலாந்து சுமார் 10 மணி நேரத்திற்கும் அதிகமாக மதுகுடித்து கொண்டாடியுள்ளதாக ரூட் தெரிவித்துள்ளார்.

வெற்றிக்கொண்டாட்டம் தொடர்பாக ரூட் தெரிவித்ததாவது ஆஷஸ் தொடரின் வெற்றிக் கொண்டாட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது. உடைமாற்றும் அறை முழுவதும் மதுவால் நிரம்பியிருந்தது. வீரர்கள் குடித்த மதுப்போத்தல்களை அவர்கள் தங்களுடைய கழுத்தில் மாலையாக அணிந்திருந்தார்கள் அடுத்த ஆட்டத்திலும் வெற்றி பெற்று 4:1 என்று தொடரைக் கைப்பற்றவே விரும்புகிறோம் – என்றார். (ம)

# நடக்கவே நடக்காது

இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடர்கள் நடைபெறுவதுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் இந்திய மத்திய அரசும் மறுப்புத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளர் அனுராத் தாக்கூர் தெரிவித்ததாவது காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. எல்லையில் அமைதி நிலவுகிறது அவசியம். எல்லையில் அமைதி நிலவாத போது இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்களுக்கு வாய்ப்பே இல்லை. எல்லையில் துப்பாக்கி சூடு மற்றும் குண்டு தாக்குதல் நடத்



தப்பட்டால் பாகிஸ்தானுடன் எப்படி விளையாட இயலும்.

எல்லையில் தாக்குதல் நடக்கும் போது இருநாட்டு ரசிகர்களும் கிரிக்கெட்டை மகிழ்ச்சியுடன் பார்ப்பார்களா? அமைதி நிலவினால் மட்டுமே பாகிஸ்தானுடன் கிரிக் கெட் விளையாடுவது பற்றி பேச்சு வார்த்தை நடத்தப்படும். என்றார். (ம)





# ஹர்பஜன்னுக்கு பதிலாக பின்னி?

இந்தியா – இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்காக இந்திய அணியில் பின்னி சேர்க்கப்பட்டுள்ளார்.

5 பந்துவீச்சாளர்கள் என்ற முறைமை வெற்றியளித்தாலும் ஹர்பஜன் பெரிதாக பிரகாசிக்காத காரணத்தினால் இந்திய அணி தோல்வியடைய நேரிட்டது. இதனால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்காக ஹர்பஜன்னுக்கு பதிலாக பின்னி சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் ஹர்பஜனின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறதாக பரவலாக கருதப்படுகிறது. இருப்பினும் இன்னமும் உத்தியோகபூர்வமாக அணியின் விவரம் வெளியிடப்படவில்லை. (ம)

# காயத்தில் இருந்து மீண்டு சாதித்தேன் கரொலின் மரீன் பெருமிதம்

சொந்த மண்ணில் விளையாடியது போன்று உணர்ந்ததால்தான் சாய்னாவை வீழ்த்தி சாதிக்க முடிந்தது. இவ்வாறு தெரிவித்தார் உலக பூப் பந்தாட்டத் தொடரில் தங்கப்பதக்கம் வென்ற கரோலின் மரின்.

சாய்னாவை வீழ்த்தியது தொடர்பாக மரீன் தெரிவித்ததாவது தங்கப் பதக்கம் வென்றது அதிகமான மகிழ்ச்சியை தருகிறது. ஏனெனில் இந்த ஆண்டு எனக்கு கடினமாக அமைந்தது. கடந்த மாதம் காலில் காயம் ஏற்பட்டது. இதனால் உலக பூப்பந்தாட்டத் தொடரில் விளையாட முடியாது என்று நினைத்தேன். காயம் குணமாகி, இரண்டு வாரத்திற்கு முன்பு மீண்டும் விளையாட ஆரம்பித்தேன். இந்த தொடரில் உற்சாகமாக அனுபவித்து விளையாடினேன். தவறிழைக்காமல் விளையாட வேண்டும் என்பது மட்டுமே எனது நோக்கமாக இருந்தது. அது மட்டுமின்றி என்னை விட சாய்னா




மிகவும் சோர்வடைந்திருந்தார். ஒவ்வொரு புள்ளியாக கவனம் செலுத்தி ஆடினேன். இதனாலேயே தங்கப்பதக்கத்தை கைப்பற்றினேன் – என்றார். (ம)

# பயிற்சியைப் புறக்கணித்தார் போல்ட்

உலகச் சம்பியன்ஷிப் தடகளத் தொடர். எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அடுத்த வருடம் ரியோவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் தொடருக்கு இது முன்னோட்டமாக கருதப்படுவதால் அனைத்து வீரர்களும் இதற்கென தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜமைக்காவைச் சேர்ந்தவரும், 6 ஒலிம்பிக் பட்டமும் வென்ற உசைன் போல்ட் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள மாட்டார் என்று மேற்கிந்தியத் தீவுகளின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது. போல்ட் தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகளின் பிரதிநிதிகள் குழு தெரிவித்ததாவது உசைன் போல்ட் மட்டும் முகாமில் கலந்து கொள்ளமாட்டார். அவர் ஏற்கனவே காயம் காரணமாக இரண்டு மாதம் விளையாடாமல் இருந்தார். தற்போது அந்த காயம் குறித்து பரிசோதனை செய்யவேண்டியுள்ளது. அதே நேரத்தில்தான் பயிற்சி முகாமும் நடைபெறுகிறது. இதனால் அவர் கலந்து கொள்ளமாட்டார். உசைன் போல்ட் பயிற்சி முகாமிற்கு கலந்து கொள்வதை விட





நேரடியாக போட்டி நடைபெற இருக்கும் இடத்திற்குச் செல்வது அவசியம் என கருதப்படுகிறது. என்று தெரிவித்துள்ளது. (ம)

# சாய்னாவுக்கு கும்ளே பாராட்டு





உலக பூப்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றிய சாய்னாவுக்கு இந்திய டெஸ்ட் அணியின் முன்னாள் தலைவர் கும்ளே பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

சாய்னா தொடர்பாக கும்ளே தெரிவித்ததாவது சிறப்பாக விளையாடியதுடன், இறுதி வரை போராடியது நல்ல விடயம். ஆனால் அன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இல்லை.

இவ்வளவு தூரம் இந்தியாவைப் பிரதிநிதித்துவம் செய்தமைக்கு பெருமைப்படுகிறோம். உங்களை வெற்றிப் பெருமிதத்துடன் இந்தியாவுக்கு வரவேற்கிறோம். என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இராணுவத்தின் சிறப்பு பயிற்சி பெறுகிறார் டோனி



ஐ.பி.எல். தொடருக்குப் பின்னர் நீண்ட நாள்களாக ஓய்வில் இருந்து வரும் இந்திய அணித்தலைவர் டோனி உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள ஆக்ரா நகரில் அமைந் திருக்கும் எலைட் பாரா ரெஜி மெண்ட் இராணுவ முகாமில் இணைந்து இராணுவ சிறப்பு பயிற்சி பெற்று வருகிறார்.

கடந்த 2011ஆம் ஆண்டு நடை பெற்ற உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணத்தை வென்றதற்காக டோனி இந்திய ராணுவத்தின் லெப்டினென்ட்டாக நியமிக்கப்பட்டு இந் திய அரசால் கௌரவிக்கப் பட் டார். அன்றிலிருந்து தனது ஓய்வு காலங்களில் ராணுவத்தினருடனும் சேர்ந்து நேரத்தைச் செலவிடுவதை வழக்கமாகக் கொண்ட டோனி தற்போதைய ஓய்வுகாலத்தையும் அவ்வாறே உபயோகப்படுத்தியுள்ளார். (ம)

## ரியோ ஒலிம்பிக் தொடருக்கான நுழைவுச் சீட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன



அடுத்த வருடம் ஒலிம்பிக் தொடர் பிரேஸிலின் ரியோ நகரில் நடை பெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான நுழைவுச் சீட்டுக்களில் 70 சதவீதமானவை விற்றுத் தீர்ந்து விட்டதாக ரியோ நகரின் ஒலிம்பிக் கட்டுப்பாட்டுச்சபை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

ஒலிம்பிக் தொடர் தொடர்பாக ரியோ ஒலிம்பிக் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்ததாவது கடந்தகால ஒலிம்பிக் தொடர்களைவிட நடப்பு வருட ஒலிம்பிக் தொடரைக் காண மக்கள் மிக ஆர்வத்துடன் உள்ளனர். மக்களின் ஆர்த்தைத் தூண்டும் வகையில் ஏற்பாடுகளும் பிரமாண்டமான வகையில் செய்யப்பட்டுள் ளன. குறிப்பாக அரங்குகள் மிகவும் சிறப்பாக திட்டமிட்டு செய்து முடிக்கப்பட்டுள் ளன. பாதுகாப்புக்காக 86 ஆயிரம் வீரர்களை களமிறக்க உள்ளோம். மொத்தத்தில் ரியோ ஒலிம்பிக் களைகட்டப்போகிறது –என்றார். (ம)

## ஜோகோவிக்கை வீழ்த்துவேன்




இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் அமெரிக்க ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் ஜோகோவிக் கைச் சந்திக்க நேர்ந்தால் நிச்சயம் தோற்கடித்தே தீருவேன் இவ்வாறு தெரிவித்துள்ளார் றோயர் பெடரர்.

நடைபெறவிருக்கும் அமெரிக்கன் ரென்னிஸ் தொடரில் கிண்ணத்தை கைப்பற்றும் வாய்ப்புக்கள் உள்ள வீரர்களில் ஒருவராக கணிக்கப்படும் பெடரர் குறித்த தொடர் தொடர்பாக தெரிவித்ததாவது அமெரிக்கன் ரென்னிஸ் தொடரை எதிர்கொள்ள ஆவலாக உள்ளேன். நடப்பு ஆண்டில் சில தொடர்களில் இறுதியாட்டம் வரை முன்னேறி கிண்ணத்தை பறிகொடுத்துள்ளேன். அதிலும் குறிப்பாக விம்பிள்டன் தொடரை இழந்தது மிகவும் ஏமாற்றமளிப் பதாக அமைந்தது. இந்த ஆட்டத்தில் ஜோகோவிக்கிடம் அடைந்த தோல்விக்கு அமெரிக்க தொடரைக் கைப்பற்றி பதிலடி கொடுப்பேன். அமெ ரிக்க தொடரில் இறுதியாட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்கொள்ள வேண்டும் என்று ஆவலாக உள்ளேன். நிச்சயம் அவரை வீழ்த்துவேன் – என்றார். (ம)

## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் புஸ்பராசா

தோற்றம் 14.05.1950 மறைவு 17.08.2015



துன்னாலை தாமரைக் குளத் தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் புஸ்பராசா 17.08.2015 திங்கட்கிழமை காலை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - தவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் இவாஞ்சலின் நேசமலரியின் (லண்டன்) அன்புக் கணவரும் வசீகரன் (பொறியியலாளர் - லண்டன்), சசீகரன் (பொறியியலாளர் - லண்டன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கரோலின், காயத்திரி (லண்டன்), பரணி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் யோர்டன், நிரன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற அருள் நாயகம், மரியதாஸ், அருள் யோசப், அருள் தேவரத்தினம் (பிரான்ஸ்) காலஞ்சென்ற அருள்மலர் தேவி ஆகியோரின் அன்பு சகோதரரும் புளோரன்ஸ் ஞானபாக்கியம், மாக்கிரட் செல்வமணி, மேரிதேவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 19.08.2015 புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வேரோண்டை மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தாமரைக்குளத்தடி,
துன்னாலை, கரவெட்டி.
0775816148
00447414956455

தகவல் - மகன்மார்
வசீகரன், சசீகரன்.

## மரண அறிவித்தல்

### பூங்காவனம் (பூங்காச்சி)



மலர்வு 12.09.1927 உதிர்வு 17.08.2015

உடுவிலை பிறப்பிடமாகவும் 29, அரச வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பூங்காவனம் (பூங்காச்சி) நேற்று (17.08.2015) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி ரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ராஜரட்ணம் (UK) மற்றும் பரமேஸ்வரி, விஜயரட்ணம் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விசாலாட்சியின் பாசமிகு சகோதரியும் பாக்கியலட்சுமி, தம்பித்துரை, திருப்பாவை ஆகியோரின் மாமியாரும் லம்போதரன், வித்தகன், விபூஷணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2015 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - மருமகன்
தம்பிப்பிள்ளை
தம்பித்துரை.

T.P - 0212229176
00442089301690

## மரண அறிவித்தல்

### கந்தையா-கனகசபாபதி

(சுழிபுரம்)



சுழிபுரம், கம்பனை அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபாபதி நேற்று (17.08.2015) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரஞ்சிதத்தின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற கணேசபரன் மற்றும் குகபரன், சிவபரன் ஆகியோரின் அன்புத் தந்தை யும், தவமணி, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பூமாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அனுஷா சிவரஞ்சினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வரதராசா மற்றும் றஜனி, ஏரம்பமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், அவிக்ன னின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2015) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கம்பனை அம்மன் கோயில் வீதி,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு அமரநாதன் (பாபு)



யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு அமரநாதன் நேற்று (17.08.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், உதிஸ்ரன், பிரதாபன், கனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் காலஞ்சென்ற சறோஜினி தேவி மற்றும் கௌரிநாதன் ஆகியோரின் சகோதரனும், கமலாதேவி காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் செல்வரத்தினம் பத்மநாதன், பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

103/5, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி இரத்தினசாமி

தோற்றம்:25.02.1951 மறைவு:16.08.2015



மட்டுவில் நாடு மேற்கு பூநகரியை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இரத்தினசாமி 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுச் சாமி-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற இரத்தினசாமியின் அன்பு மனைவியும், சத்தியசீலனின் அன்புத் தாயும், சுதாசினியின் அன்பு மாமியும், சஞ்சிகா, சரண்சிகா, சதுர்சிகா, சம்சிகா, சுடர்நிலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சீதாலட்சுமி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பால சிங்கம், ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பி.ப 2.00 மணியளவில் வாடியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் நாடு மேற்கு, வாடியடி,
பூநகரி. T.P: 0770376271

தகவல்:
இரத்தினசாமி சத்தியசீலன்
(மகன்)

## மரண அறிவித்தல்

"நானே (இயேசு) உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" யோவான் 11:25



### திருமதி சுந்தரம் பொன்னுத்துரை

வளாக வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் பொன்னுத் துரை நேற்று (17.08.2015) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் துணைவியும், செல்லம்மா, கண்மணி ஆகியோரின் சகோதரியும், புவனேஸ்வரி, செல்வராசா, நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கனகராஜா (போதகர்- கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம்), ரூபி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும், பாக்கியநாதன், பேபி, காலஞ்சென்ற குணரத் தினம் மற்றும் புஷ்பராகினி, ஜெயந்தி (சுவிஸ்), புனிதரூபன் ஆகி யோரின் அன்பு மாமியும், சிவநேசன் (ஜேர்மனி), வசந்தி (சுவிஸ்), கலா ஆகியோரின் பெரியம் மாவும், ரதிதேவி, லோஜி-சுரேஷ், சுகந்தா, சோபிதா, சங்கீதா, யுரேனஸ்-பகிரதா, நிரோஜன், அபிலாஸ், அஜித்தன், அபிராமி (சுவிஸ்), பானுப்பிரியா-சுமன், றுபிந்தா அதிஸ்ரிகா, தியானிகா, மகாசேனன் (ஜேர்மனி), வின்ஸ்லோ (சுவிஸ்), அனிற்ராமேரி-கபிலேஸ், யுனிற்ரா, றொசானா, சாம்ஜெனிற்ரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மயூரகா, கிருஷிகன், லெனரீனா, லகிஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.08.2015) செவ் வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு வளாக வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். தொ.பே.0212225743
(ரவி) 0041313814557, (வசந்தி) 0041787701459

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

IELTS

- Latest training materials. (BOOK 10)
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

British Council'S IELTS Registration Centre

Spoken English (Veta Fluency Diploma)

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517

நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

உலகத்தர ஆங்கிலம் - உன்னத எதிர்காலம்

ஸ்மார்ட் வகுப்பறைகளில் ...

ஆங்கில / கணினி கற்கைநெறிகள்

அலிசன்

புதிய பிரிவுகள் ஆரம்பம் | கொக்குவில், இணுவில், கிளிநொச்சி

077 986 6409 * 021 300 3800

## ரசிகர் மீது அதிருப்தி தெரிவித்தார் ஜோகோவிக்



ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது ரசிகர் ஒருவர் புகை பிடித்த காரணத்தினால் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார் சேர்பிஜாவின் ஜோகோவிக்.

கனடாவின் மொன்றியேல் நகரில் மொன்றியேல் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஜோகோவிக், மற்றும் ஜெரேமி இருவரும் பலப்பரீட்சை செய்தனர். இதில் ஜோகோவிக் 6-4, 6-4 என நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இந்த ஆட்டத்தின் போது ரசிகர் ஒருவர் புகைத்துக்கொண்டு இருந்துள்ளார். இந்த புகை ஜோகோவிக்கை பாடாய்படுத்தியுள்ளது. இதனால் நடுவரிடம் சென்று முறைப்பாடு செய்துள்ளார். இதுகுறித்து ஜோகோவிக் தெரிவிக்கையில் யாரோ ஒருவர் இந்த செயலை செய்திருக்கிறார். அவர் மிகவும் உயர்ந்தவர். அவர் மீண்டும் மைதானத்திற்குள் புகைபிடிக்கமாட்டார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், உண்மையிலே அது மிகவும் மோசமான புகை. நான் அதை விரும்பவில்லை - என்றார். (ம)

## செரீனா அதிர்ச்சித் தோல்வி



கனடாவின் ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் தொடர் ரொறன்ரோவில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள செரீனா 18 வயதேயான இளம் வீராங்கனை பெலிண்டா பென்சிக்கிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் செரீனா எளிதாக வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பென்சிக் செரீனாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார். முதல் செற்றை செரீனா வில்லியம்ஸ் 6-3 என்று எளிதில் வென்றார். ஆனால், 2ஆவது செற்றில் பென்சிக் ஆக்ரோஷமாக விளையாடினார். இதற்கு செரீனாவும் பதிலடி கொடுத்தார். ஆனால் பென்சிக் இந்த செற்றை கடும்போராட்டத்திற்குப்பின் 7-5 என்று கைப்பற்றினார். இதனால் வெற்றியை தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் கடும் நெருடிக்கடி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பென்சிக் 6-4 என்று எளிதில் கைப்பற்றி செரீனாவுக்கு அதிர்ச்சி கொடுத்தார். (ம)

British College of Higher Studies

வழங்கும் மிகக்குறைந்த கட்டணங்களில் மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்

அன்பார்ந்த மாணவர்களே,

உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில் நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

Spoken English with Grammar

Duration : 80 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும். (Tutes, CD Lessons, Dictionaries, etc என்பன இலவசமாக வழங்கப்படும்)

Batches Start on

Batch I : 19/08/2015 09.00am to 12.00pm Batch III : 22/08/2015

Batch II : 21/08/2015 02.00pm to 05.00pm Batch IV : 24/08/2015

Students from Grade 9 can Join

BCHS

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)

Tel : 021-2224550

Hotlines: 0777585913,0777222422, 0714299935

Obtain a world class UK Qualification

LEADING TO DEGREE FROM UK, US, NZ, AUSTRALIN UNIVERSITIES

PEARSON edexcel



HND in

Construction and the Built Environment (CIVIL ENGINEERING)

QUANTITY SURVEYING

Hotline 071 777 5666

New Batch Starts on 29.08.2015

IIS CITY CAMPUS

மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900 071 777 5666

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை




33, அரசடி றோட், யாழ்ப்பாணம். 076 821 9413, 076 821 9414, 076 821 9415.

நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு .....







அழகிய பல்வேறு வடிவமைப்புக்களைக்கொண்ட நிலப்பதிப்புக் கற்களை யாழ், வவுனியாவிலுள்ள காட்சியறைகளில் பார்வையிடலாம்

பிரணவன் என்ரபிறைசஸ்

இல.635, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

077-0256640



எங்கும் இல்லாத புதிய வடிவமைப்புக்களை கொண்ட தூக்கணங்களை பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org